விலை: 30.00
website : www.valampuri.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 133 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 18 திங்கட்கிழமை (01.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வெடுக்குநாறி மலை ஆலயத்துக்கு சட்டத்தரணிகள் குழு விஜயம்



(வவுனியா)

வவுனியா, வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்திற்கு சட்டத்தரணிகள் குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்தது.

வவுனியா வடக்கு, ஒலுமடு ஆதிசிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீள பிரதிஷ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை அனுமதி வழங்கியிருந்தது. 15

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## இன்னும் ஒரு வாரத்தில் உண்மைகள் வெளிவரும்

### கத்தோலிக்க ஆயர் பேரவை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, இதுவரை வெளிவராத உண்மைகள் இன்னும் ஒரு வாரத்தில் வெளியிடவுள்ளதாக இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹரோல்ட் அந்தோனி பெரேரா தெரிவித்துள்ளார்.

அதில் உள்ள தகவல்களை அவதானிப் 15

## தலைவர் பிரபாகரன் மிகவும் நல்லவர்

### யாழில் சிங்களப் பெண்மணி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மிகவும் நல்லவர். நேர்மையானவர் அவருக்கும் அரசாங்கத்துக்குமிடையில் குழப்பமேயன்றி எங்களுக்கும் அவருக்குமிடையில் எந்தக் குழப்பமும் ஏற்படவில்லை.

இவ்வாறு சிங்களப் பெண்மணி ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கருத்துத் 15

## இலங்கையின் உள்ளக விடயங்களில் தலையிட முடியாது

### அமெரிக்காவை எச்சரிக்கும் ரஷ்யா

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவை கறுப்புப் பட்டியலில் இணைப்பது தொடர்பான அமெரிக்காவின் தீர்மானத்துக்கு ரஷ்யா தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய லிவன் ஜகார்யன், இலங்கை உட்பட இறையாண்மை கொண்ட நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகள் தமது சொந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேற்கத்திய நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து நாங்கள் பேசுகிறோம். அவர்களுக்கு இன்னும் பல பிரச்சினைகள் உள்ளன. இருந்த போதிலும் இலங்கை உள்ளிட்ட இறையாண்மை கொண்ட நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது, என்று 15

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி


### கோப்பாயில் துயரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் பிரதான வீதியில் இயங்கி வரும் வாகன திருத்தகம் ஒன்றில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் ஆத்தி 15



## கொரோனா தொற்று இருவர் பலி

3ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் அரசியல்வாதிகள் தங்களின் ஆட்டத்துக்கு ஆட முடியாது

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சியினர் நாட்டைப் பிளவுபடுத்துவதிலேயே குறியாகவுள்ளதாகவும் அவர்களின் ஆட்டத்துக்கு ஆட முடியாதெனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை உசுப்பேத்தி விடுவதுதான் தமிழ்க் கட்சியினரின் அன்றாட தொழிலாக உள்ளது என்றும் அவர் சுட்டிக் 15

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தின் **பரீட்சை வினாத்தாள்**

உள்ளே ☛

## வடக்கின் அடுத்த ஆளுநராக ஜோன் அமரதுங்க?

### மே 7இல் நியமனம்



(கொழும்பு)

வடக்கு மாகாண ஆளுநராக ஜோன் அமரதுங்க மே7ல் நியமிக்கப்படுவார் என்று நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது. 15

## எரிபொருள் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகளை குறைக்க இலங்கை பெற்றோலிய கூட் 15

மே தின கூட்டத்தில்

## மகிந்தவை பிரதமராக்கும் முடிவை முன்வைக்கவுள்ள பெரமுன

### எதிர்க்கட்சி தகவல்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அதன் மே தினக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக நியமிப்பதற்கான யோசனையை முன்வைக்கவுள்ளது.

ராஜபக்ஷர்களை மீண்டும் பதவிகளில் அமர்த்துவதற்காகவே 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 02.04.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் செல்வராசா இளங்கோவன்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02.05.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப 'சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, சமூக வலைத்தளங்கள், பனர் பதாதைகள் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நல்லூர். (C-6461) இங்ஙனம் - குடும்பத்தினர்


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15418)

**077 814 7389, 077 986 5457**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

**பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை**

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15418)

**077 814 7389, 077 986 5457**

குருவே துணை

வாழ்க வையகம்



வாழ்க வளமுடன்

# வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் பெருமையுடன் வழங்கும் சாதாரண மனிதனை முழு மனிதனாக்கும் மனவளக்கலையின் ஆரம்ப திறனூக்கப் பயிற்சிகள்**

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம் :-** 29.04.2023 சனிக்கிழமை தொடக்கம்
05.05.2023 வெள்ளிக்கிழமை வரை

**நேரம் :-** மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

**பயிற்சிகளை வழங்குபவர்:-** மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி S.காமாட்சி அவர்கள் (தமிழ்நாடு இந்தியா) (C-6458)

## 01.05.2023 திங்கட்கிழமை 'மகளிருக்கான சிறப்பு' பயிற்சிகள்

காலை 10.00 மணி முதல் மதியம் 12.30 மணிவரை நடைபெறும்
பெண்கள் சம்பந்தமான பல உடல்,உள பிரச்சினைகளுக்கான அற்புதமான தீர்வுகளை பயிற்சியில் பங்குபற்றுவதன் மூலம் அறிந்து பயன் பெறலாம்.மனவளக்கலை பயிற்சி பெற்றுக்கொள்ளாத பெண்களும் கலந்து கொள்ளலாம்
வாழ்க வளமுடன்

தொடர்புகளுக்கு:- **யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.**
தொ.இல:- **021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745**


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 . 09 . 1938 | 30 . 04 . 2023 |



**கவிஞர் கலாபூஷணம், கலைமாமணி, கூத்தாடி**

## வி.சி.குஞ்சிதபாதம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான விகடவிற்பன்னர் வேலுப்பிள்ளை செல்லையா - அன்னம் தம்பதியரின் இளைய புதல்வரான குஞ்சிதபாதம் யாழ்ப்பாணத்தில் நேற்று (30.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கிழக்கு மாகாண கல்முனை கலாலயத்தின் நிறுவுநரும் காதலிப்போமா?, இவளைப்பார் ஆகிய வெற்றி நாடகங்களின் கதை, வசன கர்த்தாவும் பாடலாசிரியரும் பிரதம நடிகரும் இயக்குநருமாவார். மேலும் சுண்டிக்குளி யாழ்.நாடகக் கலாமன்றத்தின் 1338 அரங்கு களேறிய புகழ் பூத்த "அடங்காப்பிடாரி" நாடகமுட்பட மன்றத்தின் 48 நாடகங்களினதும் இயக்குநரும் நடிகரும் பாடலாசிரியரும் இளைப்பாறிய உள்ளூராட்சி சேவை எழுதுநரும் காலஞ்சென்றவர்களான முருகண்டி மா.தம்பையா - யோகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புத் துணைவரும் அமுதா, பிரதீபன், பார்த்தீபன், பகீரதன் ஆகியோரின் அருமைத் தந்தையும் தங்கேஸ்வரன், சிவசுதாகனி, சிந்துலா ஆகியோரின் மாமனும் விதுரன், திவ்யன், நித்யன், சௌமியன், சௌமியா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான திருமதி க.கிருகாம்பிகை, "அடங்காப்பிடாரி", நாடகமுட்பட்ட மன்றத்தின் ஏனைய நாடகங்களினதும் கதை வசன கர்த்தாவும், பிரதம நடிகரும் இளைப்பாறிய யாழ்.அஞ்சலக உத்தியோகத்தருமான காலஞ்சென்ற நாடகக் கலாமணி வி.சி.பரமானந்தம், திருமதி தயாநிதி, இளைப்பாறிய ஆசிரியர் வி.சி.நமசிவாயம், திருமதி து.மங்கையர்க்கரசி (இளைப்பாறிய நெசவுப் போதனாசிரியை) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாடகமணி, கனகையா, சந்திரசேகரி, துரைராசா, சரஸ்வதி, பத்மாவதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் ஆகிய அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

29, [illegible]மாதா கோவில் வீதி, தகவல்:-
[illegible]குளி. (15416) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றினால் இரண்டு நாட்களில் இருவர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தீவிர மடைந்து இரண்டு நாட்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக கொலன்னாவ மரண விசாரணை அதிகாரி காஞ்சனா விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஹமந்துவ பிரதேசத்தில் வசிக்கும் 56 வயதுடைய பெண்ணும் யட்டியந்தோட்டை பனாவத்தையில் வசிக்கும் 73 வயதுடைய ஆணும் உயிரிழந்துள்ளனர்.

கொவிட் -19 தொற்று மீண்டும் சமூகம் முழுவதும் பரவும் அபாயம் இருப்பதாகவும் குறிப்பாக முகக்கவசம் அணிந்து சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுவது மிகவும் பொருத்தமானது என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

# மே மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசம்

## அறிவித்தார் நீதி அமைச்சர்

(கொழும்பு)

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்கான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்குவதற்கு மே மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் உட்பட எந்தவொரு நபருக்கும் அதற்கான வாய்ப்பு இருப்பதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தமது முன்மொழிவுகளை நீதியமைச்சகத்திடம் சமர்ப்பிக்க முடியும் என்றும் அந்த முன்மொழிவுகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு முன்னர் பல சுற்று கலந்துரையாடல்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சமர்ப்பிக கப்படும் எனவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலம் அண்மையில் அரசாங்கத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுடன் சில தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இதன்படி, குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதை தற்காலிகமாக நிறுத்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் முட்டைகள் மீட்பு

(குருநாகல்)

குருநாகல் - ஹெட்டிபொல பகுதியில் களஞ்சியசாலை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 50 ஆயிரம் முட்டைகளை நுகர்வோர் அதிகார சபை மீட்டுள்ளது.

முட்டைகளை கொள்வனவு செய்யும் போர்வையில் முகவர் ஒருவரை பயன்படுத்தி நேற்று மதியம் சோதனை முன்னெடுக்கப்பட்டதாக நுகர்வோர் அதிகார சபையின் அவசர சோதனை பிரிவின் சிரேஷ்ட அதிகாரி யு.பி. பெரேரா தெரிவித்துள்ளார்,

குறித்த களஞ்சியசாலை யின் உரிமையாளரான பெண்ணொருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# வெடுக்குநாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்து செல்ல வேண்டும்

## அதுவே நீதிமன்றக் கட்டளை-சுமந்திரன் எம்.பி





(வவுனியா)

நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் வெடுக்குநாறி மலைக்கு பொதுமக்கள் சுதந்திரமாக வந்து செல்ல வேண்டும். அதனை மதித்து அரச உத்தியோகத்தர்கள் செயற்படவேண்டும் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலைக்கு நேற்று விஜயம் செய்த அவர் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தினை பார்வையிட்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் இரு கட்டளைகள் வழங்கப்பட்டதற்கிணங்க அந்த விக்கிரகங்கள் மீளவும் பிரதிஷ்டை செய்யும் செயற்பாடு இடம்பெற்றிருக்கின்றது.

குறித்த விடயம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

எனவே நீதிமன்றில் தவறான கருத்துக்கள் ஏதும் சொல்லப்பட்டால் அதற்கு பதில் அளிக்கும் விதமாக நேரிலே ஆலயத்திற்கு வந்து விடயங்களை அவதானித்துள்ளோம். இது ஒரு மகிழ்ச்சியான விடயம்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களின் அடையாள அட்டைகள் பதிவு செய்யப்பட்டமை தேவையற்ற ஒரு விடயம்.

பொதுமக்கள் சுதந்திரமாக வந்து செல்வதற்கு இடமளிக்க வேண்டும் என்பதே நீதிமன்றின் கட்டளையாக இருக்கின்றது.

அதனை மதித்து அனைத்து அரச உத்தியோகத்தர்களும் செயற்பட வேண்டும். செயற்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-299)

# சர்வதேச சந்தையில் தேயிலை விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த மூன்று மாதங்களில் நாட்டின் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுடன் ஒப்பிடுகையில் 5 மில்லியன் கிலோ தேயிலை குறைந்துள்ளதாக இலங்கை தேயிலை சபை தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 63 மில்லியன் கிலோவாகவும் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 58 மில்லியன் கிலோவாகவும் உள்ளது.

2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 62 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் இந்த வருடத்தின் கடந்த மூன்று மாதங்களில் 54 மில்லியன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கை தேயிலை சபை மேலும் தெரிவித்துள்ளது.

எனினும் தேயிலை ஏற்றுமதி வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. சர்வதேச சந்தையில் ஒரு கிலோ தேயிலையின் விலை அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் என இலங்கை தேயிலை சபை சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# பாவனைக்குதவாத ரின் மீன்களை வர்த்தக அமைச்சு சதொச மூலம் விற்பனை

## நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

2021 இல் பாவனைக்குதவாத ரின்மீன்களை விற்பனை செய்யும்படி சதொசவிற்கு வர்த்தக அமைச்சு வேண்டுகோள் விடுத்தது என நுகர்வவோர் அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்று இயக்குநர் துசான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

2021 ஜூலையில் சதொசவிற்கு வர்த்தக அமைச்சு அனுப்பிய இது குறித்த மின்னஞ்சல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

துறைமுக அதிகார சபை தடை செய்த ரின்மீன்களை விற்பனை செய்யுமாறு வர்த்தக அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாவனைக்குதவாத ரின் மீன்கள் என அறிவிக்கப்பட்டவற்றை எவ்வாறு விற்பனை செய்வது என கேள்வி எழுப்பியுள்ள துசான் அவ்வேளை இலங்கை நுகர்வோர் அதிகார சபை இதனை தடுக்க முயன்றது. ஆனால் வர்த்தக அமைச்சு விற்பனையை தொடர விரும்பியது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது அரசாங்கத்தின் ஆதரவுடனான படுகொலை. சதொசவில் தரங்குறைந்த பொருட்களே அதிகளவில் காணப்படுகின்றன எனவும் நுகர்வோர் அதிகார சபையின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார். (நி)

# அநுராதபுரம் - காங்கேசன்துறை புகையிரத சேவை இரண்டு மாதங்களுக்குள் மீண்டும் ஆரம்பம்

## போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அநுராதபுரத்திலிருந்து காங்கேசன்துறை வரையிலான புகையிரதப் பயணங்கள், மீண்டும் ஆரம்பிக்கப்படுமென போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் ஓமந்தை வரை நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புகையிரத பாதையின் நவீனமயமாக்கல் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக நேரில் ஆராயும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

புதிய ஸ்லீப்பர் கட்டைகள் மற்றும் தடங்கள் அமைப்பதன் மூலம் மணிக்கு 100 மைல் வேகத்தில் இயக்கக்கூடிய அதி நவீன ரயில் பாதையாக இந்த சாலை உருவாக்கப்படுவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான உதைபந்தாட்டம் யாழ்.மாவட்ட அணி சம்பியன்



வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட செயலககழகங்களு கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் நேற்று முன் தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது.

யாழ். மாவட்ட அணியின் ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை பிரதிநிதித்துவம் செய்த லயன்சிகா 3 கோல்களையும் கிருசாந்தினி 4 கோல்களையும் போட இடைவேளைக்கு முன்னர் யாழ். மாவட்ட அணி 7:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியின் ஆதிக்கம் தொடர யாழ். மாவட்ட வீராங் கனைகளான உமாசங்கவி மற்றும் கிருஷாந்தினி ஆகி யோர் ஒவ்வொரு கோலைப் போட ஆட்ட நேர முடிவில் யாழ். மாவட்ட அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தம தாக்கிக் கொண்டது. (நி-90)

# ரிம் டேவிட் அதிரடி; மும்பை வெற்றி

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் நேற்று மும்பை வான்கடெ மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி முதலில் பேட்டிங் செய்தது. துவக்க வீரராக களமிறங்கிய யஷஸ்வி ஜெய்ஸ்வால் அதிரடியாக ஆடி சதம் அடித்தார். கடைசிஓவர் வரை விளையாடிய ஜெய்ஸ்வால் 62 பந்து களில் 124 ரன்களை குவித்தார். இவரது அதிரடி காரணமாக ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 212 ரன் களை குவித்தது. இமாலய இலக்கை துரத்திய மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. மும்பை அணி கேப்டன்ரோகித்ஷர்மா 3 ரன்களுக்கு தனது விக்கெட்டை பறிகொடுத்தார்.

இவருடன் களமிறங்கிய இஷான் கிஷன் 28 ரன்களுக்கு அவுட் ஆனார். அடுத்து வந்த கேமரூன் கிரீன் 26 பந்துகளுக்கு 44 ரன்களை குவித்து அசத்தினார். இவருடன் ஆடிய சூர்யகுமார் யாதவ் தன் பங்கிற்கு 29 பந்துகளில் 55 ரன்களை குவித்து ஆட்டமிழந்தார். இறுதியில் நிலைத்து ஆடிய திலக் வர்மா மற்றும் டிம் டேவிட் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். கடைசி ஓவரில் மும்பை அணி வெற்ற பெற 17 ரன்கள் தேவை என்ற நிலை உருவானது. கடைசி ஓவரில் டிம் டேவிட் அதிரடியாக ஆடி முதல் மூன்று பந்துகளில் மூன்று சிக்சர்களை அடித்து மும்பைக்கு வெற்றியை தேடிக் கொடுத்தார். கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த டிம் டேவிட் 14 பந்துகளில் 45 ரன்களை குவித்தார்.


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி ) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை


(15389)

**076 755 8606 ,077 638 5683**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு**

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம் காலை 6 முதல் மாலை 6 வரை



**முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.**

**076 911 9371, 076 165 3129**

(15389)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2820

அஸ்ரின்




பரீனா




ரஞ்சன்




சயானா




றியாஸ்




தாட்சா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை வருவதை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ரணில் பிரித்தானியா விஜயம்


(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நாளை மறுதினம் புதன்கிழமை பிரித்தானியாவிற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

3 ஆவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவிற்கு செல்லவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் பிரித்தானியா செல்லவுள்ள நிலையில் பக்க நிகழ்வுகள் பலவற்றில் கலந்து கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.



பிரித்தானிய பிரதமர் உட்பட நிகழ்வில் கலந்து கொள்ளும் பிறநாட்டு தலைவர்களையும் சந்தித்து, இதன் போது ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திரு

## செல்லப்பா அரிராஜசிங்கம்

(தெய்வத்தாய் களஞ்சிய உரிமையாளர், சமாதான நீதவான் )
முத்துஐயன்கட்டு, இடதுகரை

பிறப்பு 1948.03.08 இறப்பு 2021.05.01



மாமனாய், தந்தையாய், அண்ணனாய்,
தம்பியாய், உற்ற தோழனாய், ஓர் ஆசானாய்
விளங்கிய எம் தெய்வமே, எம்மை எல்லாம்
மீளாத் துயரில் விட்டு எங்கு சென்றாய்
உன் பாசத்துக்காய் ஏங்கித் தவிக்கின்றோம்.

(C-6455)

**503, 7 ஆம் யூனிற்,
இராமநாதபுரம், வட்டக்கச்சி.**

**பிரிவால் வாடும்
மருமக்கள்.**

# இராசிபலன்

01.05.2023
சித்திரை 18, திங்கட்கிழமை
ஏகாதசி முன்னிரவு 9.53 மணிவரை
பூரம் பிற்பகல் 5.38 மணிவரை

சுபநேரம் -11.57-1.27 மணிவரை
இராகுகாலம்-7.27-8.57 மணிவரை
ஏகாதசி விரதம், தொழிலாளர் தினம்

சந்திராஷ்டமம்-
திருவோணம், அவிட்டம்

**வளவன்**

**மேஷம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடு ஆனந்தம் தரும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், திடீர் பண வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பிரயாணபயமுண்டு.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வழிபாடு முன்னேற்றம் தரும்.

**சிம்மம்** குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டால் சிறப்புகளைக் காண வேண்டிய நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், உறவினர்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், அரைகுறையாக இருந்த பணியை மீதியும் செய்து முடிப்பீர்கள்.

**கும்பம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வரம் தரும் தெய்வங்களை வழிபட்டுச் செல்வீர்கள்.

**தனுசு** தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மீனம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்கள் திறமைகள் வெளிவரும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுங்கள்.

# 'கப்' ரக வாகனம் -முச்சக்கரவண்டி ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்



(தருமபுரம்)
புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த கப் வாகனமும் முச்சக்கர வண்டியும் ஒன்றை ஒன்று முந்தி செல்ல முற்பட்டவேளை ஒன்றுடன் ஒன்று மோதியதில் பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயம் அடைந்த நிலையில் வீதியால் சென்றவர்களின் உதவியுடன் தருமபுர மருத்துவ மனையில் சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் இச் சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-316)



சாவகச்சேரி-பெரியமாவடி சித்திவிநாயகர் கலை மன்றத்தின் 45 ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு முத்தமிழ் விழா நிகழ்வுகளின் தொடக்க நாள் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் அரங்க முன்றலில் இடம்பெற்றது. (படம்- சுபேசன்)

# திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அரங்கக் கருத்தாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரங்கக் கருத்தாடல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு.இல.286 பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

"இந்தியத் தமிழ் நாடகங்களின்சமகாலப் போக்குகள்" என்னும் பொருளில் இடம்பெறவுள்ள கருத்தாடல் நிகழ்வில்,தமிழகத்தின் அரங்கச் செயற்பாட்டாளரும் புதுச்சேரி, யாழ்.அரங்கம் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநருமான கலாநிதி. ஞா.கோபி கலந்து கொண்டு கருத்துரையை வழங்கவுள்ளார்.தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (நி)

# பாதுகாப்பு வழங்கப்பட்டால் சேவைகளை ஆரம்பிக்க முடியும்

## புத்தூர் மருத்துவமனை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டால் புத்தூர் அரசினர் மத்திய மருந்தகத்தின் சேவைகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்க முடியுமென மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புத்தூர் மருத்துவமனையில் புகுந்து தாக்குதல் நடத்தி மருத்துவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்தையடுத்து மருத்துவமனையின் சேவைகள் இதுவரை இடம்பெறவில்லை.

தற்போது மருத்துவ மனைக்கு பொலிஸாரின் பாதுகாப்பு 24 மணி நேரமும் வழங்கப்பட்டுள்ளதுடன் மருத்துவமனையின் சேவையினைத் தொடர்வதற்கு மருத்துவமனையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என மருத்துவர் கோரியுள்ளார்.

அத்துடன் மருத்துவ மனையில் கண்காணிப்பு கமரா மற்றும் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப் பட்டால் அதனை மருத்துவ சங்கத்தினர் பரிசீலனை செய்து மருத்துவரை தொடர்ந்து பணி செய்வதற்கு அனுமதிக்க முடியும் என தெரிவித்தனர்.

அச்சுறுத்தல் விடுத்தவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் குறித்த மருத்துவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்த காரணத்தால் தொடர்ந்தும் அவ்வாறான நிலை தோன்றலாம் என மருத்துவர் அச்சமடைந்துள்ளார்.

எனவே மருத்துவர் தனது சேவையினை மீண்டும் தொடர்வதற்கு மருத்துவமனையின் பாதுகாப்பு உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தினால் தொடர்ந்தும் சேவையை மேற்கொள்ள முடியும் என மருத்துவர் சங்கத்தினர் தெரிவித்தனர். (நி)

# மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சன சமூக நிலையத்தால் 2021, 2022 ஆம் ஆண்டுகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவித்தல் நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் க.தர்மலிங்கம் (ஜே.பி) தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், கோப்பாய் பிரதேச வைத்திய அதிகாரி சி.சிவகோணேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (நி)

# உழைக்கும் மக்களின் வெற்றி முழக்கம்

## மே தினம்



மே தினம் உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையையும் உறுதியையும் குறிக்கும் தினம். போராடினால் வெற்றியை அடைய முடியும் என்பதை உறுதிப்படுத்திய தினம். உழைப்பின் வியர்வைத் துளிகளும் உழைப்பாளிகள் சிந்திய போராட்ட ரத்தத் துளிகளும் பெற்றுத் தந்த மே தினம்.

அமெரிக்காவில் 1890 ஆம் ஆண்டு 8 மணி நேரம் வேலை, 8 மணி நேரம் ஓய்வு, 8 மணி நேரம் உறக்கம் என்னும் கோரிக்கையை வலியுறுத்தியும் உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்டும் தொழிலாளர்கள் போராடினர். இதை எதிர்த்து அமெரிக்க அரசு, ஈவிரக்கமற்ற தாக்குதலை நடத்தியது.

இதில், ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர். உலக உழைப்பாளர்களின் துன்பத்துக்கான காரணத்தைக் கண்டறிந்து, முதலாளிகளை ஒழித்துக்கட்டி, உழைப்பாளிகள் ஆட்சியில் அமர்ந்தால்தான் அனைத்து விதமான துன்பங்களும் தீரும் என்றும் முதலாளிகள் உலக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கையே தடுத்து வருகின்றனர் என்றும் இதை முடிவுக்குக் கொண்டு வரும் வல்லமை, உழைப்பாளர்களிடம் மட்டும்தான் உள்ளது என்றும் கூறி இதையெல்லாம் செய்வதற்கு, உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள் என்றும் கூறினார் ஒப்பற்ற பொதுவுடைமைக் கொள்கையை உலகுக்குத் தந்த ஆசான் கார்ல்மார்க்ஸ். அவருடைய பிரகடன வார்த்தைகளை வேதமாகக் கொண்டு 42 ஆண்டுகள், உலகெங்கும் உள்ள உழைப்பாளர்கள் நடத்திய இடைவிடாத போராட்டத்தின் பயனாக இந்த வெற்றி நிலைநாட்டப்பட்டது.

1886 ஆம் ஆண்டு அமெரிக்கத் தொழில் நகரங்களான நியூயார்க், சிகாகோ, பிலடெல்பியா, மில்வக்கி, சின்சினாட்டி, பால்டிமோர் என அமெரிக்கா முழுவதும் 3.50 லட்சம் உழைப்பாளர்கள் பங்கேற்ற மாபெரும் வேலைநிறுத்தம் தொடங்கியது. இந்த வேலை நிறுத்தத்தில் 1,200க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்த தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து, "அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு" என்ற இயக்கம் உருவாக்கப்பட்டது.

இவ்வியக்கம் 8 மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்துத் தொடர்ந்து போராட்ட இயக்கங்களை நடத்தியது. அத்தோடு மே 1, 1886 அன்று நாடு தழுவிய வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தது.

இவ்வியக்கமே மே தினம் பிறப்பதற்குக் காரணமாகவும் அமைந்தது. இவ்வாறு உலகெங்கும் நடந்த போராட்டத்தின் விளைவாக அமெரிக்காவில் இதற்கான வெற்றியை அடைந்தனர்.

தொழிலாளர்களின் போராட்டத்தால் நிலைகுலைந்த அரசு, அவர்களின் கோரிக்கையை 1890 ஆம் ஆண்டு ஏற்றது. தொழிலாளர்களின் இந்த வெற்றியைக் குறிக்கும் விதத்தில் மே முதல் நாள் தொழிலாளர் தினமாகவும் மே தினம் என்றும் உலகெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றமடைந்த இலங்கையை கட்டியெழுப்ப அனைவரும் ஒற்றுமையுடன் கைகோருங்கள்

### மே தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

சவாலான காலங்களில் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான கடினமான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக, பொறுமையுடனும் தைரியத்துடனும் காத்திருந்த அனைத்து உழைக்கும் மக்களுக்கும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தொழிலாளர் தின வாழ்த்துச் செய்தியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது."உழைக்கும் மக்களே, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார செயல்முறையிலும் வலுவான செல்வாக்கை செலுத்தக்கூடிய சமூக சக்தியாக உள்ளனர்.வரலாறு நெடுகிலும் நாம் எதிர்கொண்ட மற்றும் வெற்றி கொண்ட சவால்கள் ஏராளம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வதற்கு உழைக்கும் மக்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளனர்.கடந்த ஆண்டு மே தினத்தை கொண்டாடும் நேரத்தில், நாடு மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்ததால், அனைவரும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையின் உழைக்கும் மக்களின் பெருமையை உலகுக்குக் காட்டக் கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது இருப்பதோடு, இந்த இக்கட்டான நேரத்தில் குறுகிய அரசியல் நலன்களுக்கு இரையாகாமல் நாட்டை முதன்மைப்படுத்தி செயற்படுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்தாலும் உழைக்கும் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்த இடமளிக்கப்பட மாட்டாதுஎன்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன்.

2048 ஆம் ஆண்டளவில் முன்னேற்றமடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான புதிய சீர்திருத்தப் பாதையில் ஒற்றுமையுடன்கைகோர்க்குமாறு அனைத்து உழைக்கும் மக்களையும் நான் அழைப்பதோடு, அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்திற்காக அவர்களை வாழ்த்துகிறேன்" என அவர் தெரிவித்துள்ளார்.(நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 120 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 200 |
| தக்காளி | 200 | 180 | 150 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 240 | 200 | 180 | 250 |
| கரட் | 160 | 240 | 140-240 | 300 |
| பூசணி | 60 | 50 | 60 | 40 |
| புடோல் | 120 | 140 | 140 | 150 |
| வாழைக்காய் | 80 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 350 | 350 | 300 | 300 |
| வெண்டக்காய் | 120 | 150 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 180 | 180 | 200 | 200 |
| லீக்ஸ் | 280 | 260 | 300 | 300 |
| பீற்றூட் | 200 | 160 | 180 | 250 |
| கறிமிளகாய் | 250 | 250 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 600 | 1000 |
| போஞ்சி | 250 | 260 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 160 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 150 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | 600 |
| முள்ளங்கி | 60 | 100- | 100 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 140 | 50 | 50 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 160 |


உ

மாவை ஆதீனகர்த்தா வழங்கும்

## திருமண வரவேற்பு உபசார அழைப்பு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோயில்
ஆதீனப் பேரரசு மஹாராஜஸ்ரீ
து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்
கலாவதியம்மா தம்பதியரின்
கனிஷ்ட புத்திரி சௌபாக்கியவதி

**அனு(எ) குருப்ரியா,**
B.Sc.,
அவர்களுக்கும்

ஸ்ரீ R.ராகவன்
சங்கரி தம்பதியரின்
கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி

**கார்த்திக் (எ) கார்த்திகேயன்,**
B.Sc.,
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு தென்னிந்தியா, தமிழ்நாட்டில் இனிதே நடந்தேறிய திருமண வைபவத்தை முன்னிட்டு புதுமணத் தம்பதிகளை வரவேற்று உபசாரம் செய்ய மாவைக்கந்தன் அனுக்கிரகம் கைகூடி இருப்பதனால், நிகழும் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 20 ஆம் நாள் (03.05.2023) **புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு** மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோயில் வளாகத்தில் அமைந்துள்ள **"அக்ரஹாரம்"** எனப்படும் **ஆதீனகர்த்தா இல்லத்தில்** வரவேற்பு உபசாரம் நடைபெறவிருப்பதனால் தாங்கள் தங்கள் இஸ்டமித்திர பந்துக்களுடன் குடும்ப சகிதம் முன்னதாகவே வருகை தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து விருந்துபசாரத்தில் பங்குபற்ற வேண்டுமாய் இத்தால் அன்புடன் அழைத்து வரவேற்கின்றோம்.

*இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி அனைவரும் வந்து புதுமணத் தம்பதிகளை வாழ்த்தி ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.*

*தங்கள் நல்வரவை இனிதே நாடும்*

**ஸ்ரீ R. ராகவன்**
**ஸ்ரீமதி சங்கரி தம்பதிகள்,**
நங்கநல்லூர், தமிழ்நாடு.

**மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்**
**ஸ்ரீமதி.கலாவதியம்மா தம்பதிகள்,**
**மாவிட்டபுரம்,தெல்லிப்பழை.(இலங்கை)**
0091-7358171125, 0094-771042257.

(15397)



## மணிவிழா வாழ்த்து



திரு. **வேலுப்பிள்ளை விமலேந்திரன்**
(பாடசாலைப் பணியாளர்)
சேவைக் காலம்
ப.நோ.கூ. சங்கம் புதுக்குடியிருப்பு
- 1995.01.01 -2001.12.24
பிரதேச செயலகம் வவுனியா
-2001.12.24 -2006.12.30
மு. வள்ளிபுனம் ம.வி
-2006.12.30 -2018.12.30
கோட்டக் கல்வி அலுவலகம்,
புதுக்குடியிருப்பு
- 2018.12.30-2022.12.30

பாடசாலை நாட்களிலே
மாணவர்க்கு பாதுகாவலராய்
பக்குவமாய் பணிபுரிந்து
ஆசிரியர்கட்கு அடுத்தபடி நின்று
அனைத்துப் பணிகளையும்
சிறப்புடன் செய்து
இரவு,பகல் பாராது ஈடு இணையற்ற
பணியினை பள்ளிக்கு வழங்கி
ஓய்வு பெறும் வயது வரை
ஓயாது சேவையினை வழங்கிய
உம் அர்ப்பணிப்பிற்காய் என்றுமே
சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம்
என்றும் அகம் மகிழும் அன்புடன்...

Best Wishes

(15415)

**வாழ்த்துவோர்-**
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.



## மணிவிழா வாழ்த்து



செல்வி. **மகேஸ்வரி நல்லதம்பி**
(BA,PGDE)
(ஆசிரிய ஆலோசகர், விசேட கல்வி)
சேவைக் காலம்
மு. மல்லாவி மத்திய கல்லூரி
- 20.01.1989-31.12.1992
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
-01.01.1993-31.12.2007
வலயக் கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு
-01.01.2008-04.04.2023

தலைமைக்கொரு இலக்கணமாய்
கடமையிலே கண்ணியமாய்
மனத்துணிவில் இமயமாய்
நேர்மையிலே சூரியனாய்
அறிவிலே ஆழ்கடலாய்
எளிமையின் இருப்பிடமாய்
எமை வழிகாட்டிய உத்தமியே
செல்லும் இடமெல்லாம்
செம்மையாய் வாழ்வீர் நீர்
ஓங்குக உம் புகழ்
வையகம் வாழும் வரை

(15415)

Best Wishes

**வாழ்த்துவோர்-**
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## கோடை காலமும் மூலிகைகளின் மருத்துவக் குணங்களும்

பருவ காலங்களுக்கு ஏற்ப என்னென்ன உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பது பற்றி மூலிகை மருத்துவத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

முன்பனிக்காலம், பின்பனிக் காலம், இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம் என ஆறு காலங்களாக பிரிக்கப் பட்டுள்ளது. அப்பருவ காலங்களில் சூழல், உடல் நிலைகளுக்கு ஏற்ப உணவுமுறைகளை உட்கொள்ளவேண்டும் உடலின் தேவை, அக்கினி மாற்றம் என்பவற்றுக்கேற்ப அவ்வப் பருவகாலங்களில் இவ் உணவுகள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் உடம்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பக்க விளைவுகளற்ற உடல்நிலையைப் பேண முடியும்.

இவ்அறிவின்மையால்உடல் எதிர்ப்புச் சக்தி குறைவு, பல் வேறு நோய்கள் ஏற்படுகின்றன. அந்தவகையில் வெப்ப காலத்தில் அடியெடுத்து வைக்கின்றோம்.

எனவே, பித்த சம்மந்தமான நோய்கள் அதிகளவில் ஏற்படலாம். ஆகவே பித்தத்தைக் குறைக்க வேண்டிய, குளிர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய கீரைகள், பழங்கள் என்பவற்றை அதிகளவில் உண்ண வேண்டும். இவை அதிகளவிலான போசனைப் பெறுமானங்களை உள்ளடக்கியது. அதிகளவிலான பழங்கள், கனியுப்புக்கள், விற்றமின்களை அதிகளவில் கொண்டுள்ளது. ஆரோக்கியம்,நோய் எதிர்புச் சக்தி, அழகு என்பவற்றைப் பெற சிறியவர்கள்முதல்பெரியவர்கள் வரை அன்றாட உணவில் சேர்க்க வேண்டும். வயது, பால், உடல் நிலை என்பவற்றுக்கேற்ப அவற்றின்அளவுகள் மாறுபடும்.

எவ்வாறான பழங்களை எப்படி உண்பது பற்றி நாம் கவனிக்க வேண்டும். எமது மருத்துவத்தின் சுவைக்கு முக்கியத்துவம் தராமல் சத்து மிகுந்த உணவுக்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.


வாய்ச்சுவையைக் கட்டுப் படுத்தும் பழக்கத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். அளவிற்கு மீறிய உணவுகளை உள்ளெடுப்பதே நோய்க்குக் காரணம் ஆகும் எனும் கூற்றில் ஐயம் இல்லை.

"பிணி எனப்படுவது சார்பின் பிரிது ஆய்
இயற்கையின் திரிந்து, உடம்பு இடும்பை புரிதல்"

அதாவது இயற்கையின் படைப்பே உயிரும் உடலும். இயற்கைக்கு ஒவ்வாத உணவுப்பழக்கங்கள், தீய நடத்தைகள் காரணமாக உடலை நோய் பற்றிக் கொள்கின்றது.

### வெள்ளரி

கோடைக் காலத்தில் சாகுபடியாகும் பழங்களில் வெள்ளரியும் ஒன்றாகும். அதன் பிஞ்சு சுவையாக இருக்கும். கோடைக் காலத்தில் வெயிலின் கொடுமை மிகுதியால் தாகம், களைப்பு போன்றன ஏற்படுகின்றன. இதற்கு நன்றாகப் பழுத்து



இருக்கும் வெள்ளரிப் பழத்தின் சதைப் பகுதியினை (Fruit Bulb) விதையை நீக்கி நசுக்கி சாறு எடுத்து சீனி/மோர் கலந்து குடிக்க தாகம் தணிந்து புத்துணர்ச் சியை ஏற்படுத்தும். வெள்ளரிப் பழத்தை தோல் மற்றும் விதையை நீக்கி சர்க்கரை கலந்து அப்படியே சாப்பிடலாம்.

இப்பழமானது நன்றாகப் பழுத்தவுடன் தானாகவே பிளந்து கொள்ளும். உடல் உஷ்ணத்தைத் தணிக்கும் ஒரு சிறந்த பழம் ஆகும்.

வெள்ளரிப்பழம் (100கிராம்) இல் உள்ள சத்துக்கள்: புரதம்-0.4கிராம், கொழுப்பு-0.1கிராம், காபோவைதரேற்று -25கிராம், கல்சியம் -10 மில்லிகிராம், பொஸ்பரசு-25 மில்லிகிராம், இரும்பு-1.5 மில்லிகிராம், தயமின் -0.03மில்லிகிராம், நியாசின்- 0.2 மில்லிகிராம், நார்ச்சத்து-0.4 கிராம்.

### வில்வம்பழம்

வில்வம்பழம் கடைகளில் விற்கப்படுவதில்லை. தேவையானால் வில்வ மரம் உள்ள இடத்திற்குச் சென்றே பெற முடியும். ஆனால் இவ்வில்வ பழமானது கசரோகத்திற்கும் வயிற்றுப்புண்ணிற்கும் சிறந்த ஓர் பழம் ஆகும். வில்வம் பழத்தின் சதைப் பாகத்தினை தேவையான அளவு சீனி,சர்க்கரை சேர்த்து பிசைந்து காலையில் சாப்பிட வயிற்றுப் புண் நீங்கி உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். இதில் உள்ள விதையை நீக்கி இதன் சதையை பனங்கற்கண்டுடன் சேர்த்துச் சாப்பிட உடலுக்கு குளிர்ச்சியையும் தந்து வலுவையும் கொடுக்கும்.



#### வில்வம்பழம் 100 கிராமில் உள்ள சத்துக்கள்

புரதம்- 18 கிராம், கொழுப்பு-0.3கிராம், காபோவைதரேற்று-31.8கிராம், கல்சியம்-85 மி. கிராம், பொஸ்பரஸ்-50 மி. கிராம், இரும்பு-0.6மி.கிராம், தயமின்-0.13 மி.கிராம், நியாசின்-1.1 மி.கிராம், றைபோபிளேவன்-0.13 மி. கிராம், விற்றமின் சீ-8 மி.கிராம், நார்ச்சத்து-2.9 மி.கிராம்.

### விளாம்பழம்

இதனுடைய பழ ஓட்டை நீக்கி பழத்தை மட்டும் சாப்பிட்டு வர வாய்நீரூறல், தொண்டைப் புண் நீங்கி நல்ல பசி உண்டாகும். பழத்துடன் சீனி/சக்கரை சேர்த்தும் சாப்பிடலாம். நன்றாக பழுத்த விளாம்பழம் தான் சாப்பிட் ஏற்றதாக இருக்கும். தினசரி காலை ஆகாராம் முடிந்ததும் நன்றாகப் பழுத்த விளாம்பழம் எடுத்து உடைத்து சதைப்பகுதியை ஒரு பாத்திரத்தில் போட்டு சீனி/சர்க்கரை சேர்த்து இவ்வாறு 21 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரலாம். விளாம்பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வர இரத்தம் சுத்தமாகும், உடல் வளர்ச்சி பெறும், அறிவு விருத்தியடையும்.

#### விளாம்பழம் (100 கிராம்) உள்ள சத்துக்கள்

புரதம்-7.1 கிராம், கொழும்பு-3.7 கிராம், காபோவைதரேற்று-18.1 கிராம்.

### மாதுளம் பழம்

நன்றாகப் பழுத்த மாதுளம் பழத்தை வாங்கி வந்து நறுக்கி பிளந்து உள்ளேயுள்ள முத்துக்களை எடுத்து ஒரு பாத்திரத்தி போட்டு சுத்தமான கையினால் நன்றாகப் பிசைந்து விதைகளை எடுத்துவிட்டுஅந்தச் சாறு இருக்கும் அளவில் நான்கிலொரு பங்கு சர்க்கரையை சேர்த்து சாப்பிடலாம்.

இந்தச் சாற்றுடன் தேக்கரண்டியளவு சுத்தமான தேன் சேர்த்து காலை ஆகாரத்துக்குப் பின் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மலம் நன்றாக இறங்கும். உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். உடல் பலம் பெறும். வியாதி அகன்று உடலுக்குத் தேவையான சக்தியை பெறலாம். மாதுளம் பழத்துடன் சிறிதளவு தேன் கலந்து சாப்பிட அஜீரண கோளாறு நீங்கும்

#### மாதுளம்பழம் (100 கிராம்) உள்ள சத்துக்கள்.

புரதம்-1.6 கிராம், கொழுப்பு-0.1 கிராம், காபேவைதரேற்று-14.5 கிராம், கல்சியம்-10 மி. கிராம், பொஸ்பரஸ் 70 மி.கிராம், இரும்பு-0.3 மி.கிராம், தயமின்-60 எம்.சீ.கிராம், நியாசின்-0.3 மி.கிராம், றைபோபிளேவின்-100 எம்.சீ.கிராம், விற்றமின் சீ-16 மி.கிராம், நார்ச்சத்து-5.1 கிராம், ஈரலிப்பு-78 கிராம்.

### பப்பாளிப்பழம்

பப்பாளிப்பழம் மிகுந்த சத்துக்களைக் கொண்டது. மலத்தை இழக்கி நன்கு வெளியேற்றி மலச்சிக்கலை நீக்கும். இரத்தத்தைச் சுத்தி செய்து விருத்தி செய்யும். தினமும் நன்கு பழுத்த பப்பாளித் துண்டொன்றைச் சாப்பிட்டு வருவதால் எந்த வகையான நோய்களும் வராது. நோய் எதிர்ப்புச் சக்தியை கொண்டிருக்கும். பப்பாளியை Juice ஆக அடித்து சாறினை அருந்தலாம்.

#### பப்பாளிப்பழம் (100 கிராம்) உள்ள சத்துக்கள்

புரதம்-0.6 கிராம், கொழுப்பு -0.1 கிராம், காபோவைதரேற்று-[illegible] கிராம், கல்சியம்-[illegible] மி.கிராம், பொஸ்பரஸ்-13 மி. கிராம், இரும்பு-0.5 மி.கிராம், கரோட்டின்-666 எம்.சீ.கிராம், தயமின்-40 எம்.சீ.கிராம், நியா சின்-0.2 மி.கிராம், றைபோபி ளேவின்-250 எம்.சீ.கிராம், விற்றமின் சீ-57 மி.கிராம், நார்ச்சத்து-0.8 கிராம், ஈரலிப்பு-90.5 கிராம்.

### பேரீச்சம்பழம்

தினமும் 2 பேரீச்சம்பழங்களை விதை நீக்கி 250 மில்லி லீற்றர் காய்ச்சிய பசுப்பாலில் குடித்து வந்தால் உடல் பலம் பெறும். புதிய இரத்தம் உண்டாகும் தோலை வழவழப்பாக்கும். கண் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும். தொற்று நோய்கள் அணுகாது பல் வியாதிகள் குணமாகும் பற்களைக் கெட்டியாக்கும். பாலில் பேரீச்சம்பழங்களை போட்டு காய்ச்சிப் பருகலாம்.


உடலுக்கு குளிர்ச்சி தரும். சிறுநீரை அதிகப்படுத்தும். இப்பழச்சாற்றை எலுமிச்சம் பழச்சாறுடன் கலந்து கொடுக்க உஷ்ணம் சம்பந்தமான வெள்ளை நோய், வயறெரிவு, தேக எரிவு குணமாகும். இதில் உயிர்ச்சத்து வீ-6 மில்லி கிராம் அளவு 100 மி. கிராம் பழத்தில் காணப்படும்

#### பேரீச்சம்பழம் (100 கிராமில்) உள்ள சத்துக்கள்

புரதம்- 2.5 கிராம், கொழுப்பு-0.4 கிராம், காபோவைதரேற்று-75.8 கிராம், கல்சியம் -120 மில்லி கிராம், பொஸ்பரஸ் -7.3 மில்லி கிராம்,இரும்பு- 26 எம்.சீ கிராம், கரோட்டின்-10 எம்.சீ.கிராம் நியாசின் 0.9 மில்லி கிராம் றைபோ பிளேவின் -20எம்.சீ கிராம் விற்றமின்சீ-3 மில்லி கிராம், நார்ச்சத்து 3.9 கிராம், ஈரலிப்பு- 15.3 கிராம்.

### நுங்கு

பனை நுங்கும் உடல் அழற்சி, சீதபேதி என்பனவற்றைப் போக்கும். நுங்கு நீர் தடவ வேர்க்குரு நீங்கும்.



#### பனம்பழம் 100 கிராமில் உள்ள சத்துக்கள்

புரதம் -2.8 கிராம், கொழுப்பு- 1கிராம், கல்சியம் -86 மில்லி கிராம், பொஸ்பரஸ் -10 மில்லி கிராம், இரும்பு -2.2 மில்லி கிராம், விற்றமின்- 28.5 மில்லி கிராம், நார்ச்சத்து-0.5 கிராம் , ஈரலிப்பு -79 கிராம்.

### எலுமிச்சம்பழம்

இதில் செப்புச் சத்து அதிகமாகக் காணப்படும். ஒரு பழச்சாற்றை ஒரு டம்ளர் தண்ணீரில் சீனி சேர்த்து கரைத்து சாப்பிடுவதால் பல் வியாதி சுகமாகும்.

அரிய சஞ்சீவி போல் தொழிற்படும். குறைந்த செலவில் வியாதிகளை குணப்படுத்தும் அரிய மருந்தாகும். எலுமிச்சம் பழத்தை பிழிந்து 1/2 தேக்கரண்டி சோற்றுப்பைப் போட்டு



கலக்கி விடியற் காலையில் சாப்பிட வேண்டும். 3 நாட்கள் சாப்பிட்ட பின் மலச்சிக்கல் தீரும். உடல்க்கு தேய்த்து குளிக்க அரிப்பு, சொரி, சிரங்கு, கரப்பான் படை நீங்கும். எலுமிச்சம்பழத்தை வதக்கி ரசத்தை அருந்த வயிறுவலி தீரும். எலுமிச்சம்பழச்சாறு, தயிர் தென்னம் பூச்சாறு ஒவ்வொன்றையும் சமமாக காலை, மாலை குழந்தை களுக்குத் தர நீர்ச் சுருக்கு குணமாகும். இதனைப் பொட்டில் இலேசாகத் தடவ தலைவலி குறையும்.

#### எலுமிச்சம்பழம் (100 கிராம்) உள்ள சத்துக்கள்

புரதம்-1 கிராம், கொழுப்பு-0.9 கிராம், காபோவைதரேற்று -70 மி.கிராம், பொஸ்பரஸ்-10 மி.கிராம், இரும்பு-2.3 மி. கிராம், தயமின்-20 மி. கிராம், நியாசின்-0.1 மி.கிராம், விற்றமின் சீ-39 மி.கிராம், நார்ச்சத்து-1.7 கிராம்.

### நாரத்தை

இதன் பழச்சாற்றை அருந்த தாகம் தணியும். உடலுக்கு குளிர்ச்சி கிடைக்கும். நாரத்தை பழச்சாற்றை 250 மி.லீற்றருக்கு 150 கிராம்சீனிசேர்த்து அடுப்பேற்றி பாகுபதம் வரும் வரை காய்ச்சி பெறப்படுவது நாரத்தை பழப்பாகு எனப்படும். இப்பழச் சாற்றை உண்டு வர உணவு எளிதில் ஜீரணமாகும்.

நல்ல தூக்கம் வருவதற்கு நாரத்தை சாற்றில் 1/2 டம்ளர் எடுத்து 2 தேக்கரண்டி தேன் விட்டு கலக்கி தூங்குவதற்கு ஒரு மணிநேரம் இருக்கும் போது சாப்பிட்டு விட வேணடும். தூக்கம் இலகுவில் வரும்.

#### நாரத்தை (100 கிராம்) உள்ள சத்துக்கள்

புரதம்-1 கிராம், கொழுப்பு-0.1 கிராம், காபோவைதரேற்று-10 கிராம், கல்சியம்-30 மி.கிராம், பொஸ்பரஸ்-30 மி.கிராம், இரும்பு-0.2 மி. கிராம், தய்மின்-120 எம்.சீ கிராம், நியாசின்-0.3 மி. கிராம், ஈரலிப்பு-88.5 கிராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
# க.பொ.த (சா/த) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்
# கணிதம் பகுதி - I

## பகுதி A

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**

1. $\sqrt{23}$ இற்கு கிட்டிய எண்ணாக அமைவது.
I) 5.0  II) 4.7  III) 4.8  IV) 4.9

2. 7 cm ஆரையுடைய ஆரைச்சிறையின் பரப்பளவைக் காண்க.





3. பங்கு ஒன்றின் விலை ரூ.25 ஆகவுள்ள 200 பங்குகளை ரவி கொள்வனவு செய்து அவற்றுள் பங்கு ஒன்றை ரூபா 30 இற்கு விற்பனை செய்தால் அவருக்கு கிடைக்கும் மூலதன இலாபத்தைக் காண்க.


4. $\frac{5}{2x}+\frac{3}{4x}$ சுருக்குக.

5. $\frac{1}{2x}+2=3$ தீர்க்க.

6. ABC, PQR ஆகிய முக்கோணிகள் ஒருங்கிசைவதற்கு தேவையான மேலும் ஒரு சந்தர்ப்பத்தைக் கூறி ஒருங்கிசையும் நிபந்தனையை எழுதுக.




7. ABCD ஓர் இணைகரமாகும். DE//AB உம், ABE இன் பரப்பளவு $8cm^2$ எனின் ABC இன் பரப்பளவைக் காண்க.





8. அடியின் பரிதி 44 cm ஆகவுள்ள செவ்வட்ட உருளையின் உயரம் 12 cm ஆகும். அதன் மொத்த மேற்தள பரப்பளவைக் காண்க.

9. O வை மையமாகக் கொண்ட வட்டத்தின் தரப்பட்ட தரவுகளுக்கமைய x இன் பருமனைக் காண்க.





10. பொது மடங்குகளுள் சிறியதைக் காண்க.
$5ab^2c$ , $15ab$ , $3bc$


11. $n(A \cup B)$ இன் பெறுமதி யாது?





12. கிடைத்தரையின் புள்ளி A யிலிருந்து 20m தூரத்தில் அமைந்த மின்கம்பம் BC யின் உச்சியின் ஏற்றகோணம் $54^\circ$ ஆகும். தரப்பட்ட உருவில் தரவுகளைக் குறிக்க.




13. x+5>12 எனின் x இன் மிகக் குறைந்த நிறையெண் யாது?





14. முக்கோணி ABD இன் AC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது. AB = AC , $B\hat{A}C=110^\circ$ எனின் $B\hat{C}D$ இன் பருமனைக் காண்க.




15. சீரான இயக்கமுள்ள இயந்திரங்கள் இரண்டில் 6 மணித்தியாலத்தில் வெட்டி முடிக்க திட்டமிடப்பட்ட குளமொன்றை 4 மணித்தியாலத்தில் நிறைவு செய்ய பயன்படுத்த வேண்டிய இயந்திரங்களின் எண்ணிக்கை யாது?


16. ABCD நாற்பக்கலின் ஊடாக கீழ்காணும் கூற்றுக்கள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் X என அடையாளமிடுக.

| | |
|---|---|
| AB // DC உம் AB = DC எனின் ABCD ஒரு இணைகரமாகும். | |
| $D\hat{A}C = A\hat{C}B$ உம் AB = DC ஆகும் எனின் ABCD இணைகரமாகும். | |
| AB = BC = CD = DA எனின் ABCD இணைகரமாகும். | |




17. செக்கனுக்கு 2 லீற்றர் நீர் வெளியாகும் குழாய் ஒன்றை திறந்து விடும் போது நீர்த்தாங்கி முற்றாக நிறைய 20 செக்கன் எடுக்கும் எனின் நீர்த்தாங்கியின் கொள்ளளவைக் காண்க.

18. O வை மையமாகக் கொண்ட வட்டத்தின் ஆரை 10cm உம் OB = 6 cm உம் ஆகும். AC இன் நீளத்தைக் காண்க.




19. பெற்றோர் சங்கக் கூட்டத்திற்கு தாய் மற்றும் தந்தைமார் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட தாய்மார்களின் எண்ணிக்கை 45 ஆகும். தரவுகளைக் காட்டும் வட்டவரைபில் இருந்து கூட்டத்திற்கு வருகை தந்த மொத்த பெற்றோர்களின் எண்ணிக்கையைக் காண்க.





20. $4a^2 - 9$ காரணிகளாக வேறாக்குக.

21. $\log_a 25=2$, எனின் a இன் பருமனைக் காண்க.


22. Y=5X-6 எனும் நேர்கோட்டுக்கு சமாந்தரமாகவும் (0,2) புள்ளிக் கூடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.

23. உருவில் AB//FD,ED//AC ஆகும். E ஆனது AB இன் நடுப் புள்ளியாகும். AB = 6 cm ,AC = 8 cm எனின் AFDE இன் சுற்றளவைக் காண்க.




24. A ,B தம்முள் புறம் நீக்கும் நிகழ்ச்சிகளாகும். P(AUB)=3/4, P(A)=1/2 எனின் P(B) ஐக் காண்க.

25. AB,CD ஆனது பாதையில் அமைந்த இரண்டு எல்லைகளாகும். A,B க்கு சமதூரத்தில் AB எல்லையிலிருந்து 21m தூரத்தில் CD மீது மின் கம்பமொன்றை நட வேண்டியுள்ளது. ஒழுக்கு பற்றிய அறிவைப் பயன்படுத்தி மின்கம்பம் நட வேண்டிய இடத்தைக் குறிக்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி B

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்குக.**

01. எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் முற்றாக நிரம்பிய தாங்கியிலிருந்து 3/5 பகுதி பொதுமக்களுக்கும் எஞ்சியதில் 1/2 அத்தியாவசிய தேவைகளுக்கும் மிகுதி மறுதினத் திற்கும் ஒதுக்கப்பட்டது.


i. அத்தியாவசிய தேவைக்காக ஒதுக்கப்பட்டது முழுத் தாங்கியின் என்ன பங்காகும்?

அத்தியாவசிய தேவைக்காக ஒதுக்கிய பகுதி போது மானதாக இல்லை என்பதால் பொதுமக்களுக்காக ஒதுக்கிய பகுதியில் 1/6 பகுதி அத்தியாவசிய தேவைக்கு ஒதுக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

ii. அத்தியாவசிய தேவைக்கு ஒதுக்கிய பகுதி முழுத் தாங்கியின் என்ன பங்காகும்?

iii. புதிய தீர்மானத்திற்கு அமைய பொதுமக்களுக்கு அன்றைய தினம் வழங்கிய எரிபொருளின் அளவு 10000L எனின் மறுதினத்திற்கு ஒதுக்கப்பட்ட எரிபொருளின் அளவைக் காண்க.

02. உருவில் காட்டப்படுவது நாமகள் வித்தியாலயத்தில் கணித மன்றம் ஒன்றின் இலச்சினையின் மாதிரி வடி வமாகும். சதுரம் ஒன்றுடன் அரைவட்ட பகுதியிலான தகடு ஒன்றினால் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.




i. AD அரைவட்டப் பகுதியின் வில்லின் நீளத்தைக் காண்க.

ii. இலச்சினையை சுற்றி ரிபன் நாடா ஒன்று ஒட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது எனின் தேவையான நாடாவின் நீளத்தைக் காண்க.

iii. ஒரு இலச்சினை செய்வதற்கு தேவையான தகட்டின் பரப்பளவைக் காண்க.

IV. அரைவட்டப் பகுதியின் பரப்பளவிற்குச் சமனான பரப்பளவுடைய செங்கோண முக்கோணப் பகுதி ஒன்று தகட்டின் BC யை அடியாகவும் அடுத்த பக்கம் நீட்டப்பட்ட DC இன் மீதும் அமையுமாறு பொருத்தப்பட வேண்டும். இவ்வமைவை அளவீடுகளுடன் உருவில் காட்டுக.

03. ரமணன் வியாபார தேவைக்காக வாகனமொன்றை கொள் வனவு செய்வதற்கு ஆண்டுக்கு 8% எளிய வட்டிக்கு ரூபா. 3,500,000 ஐக் கடன் பெற்றார்.

i. கடன் தொகைக்கு ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய வட்டி யாது?

ii. கடன் தொகையை 10 வருடத்தில் முழுமையாக செலுத்தி முடிப்பதற்கு ஒப்புக்கொண்டால் 10 வருடத்தில் கடனை தீர்ப்பதற்குச் செலுத்த வேண்டிய மொத்த பணத்தொகையைக் காண்க.


iii. உற்பத்திச் செலவு ரூபா. 2 400 000 ஆகவுள்ள மோட் டார் வாகனத்தை இந்நாட்டிற்குக் கொண்டு வரும் போது 12% தீர்வை அறவிடப்படும் எனின் செலுத்த வேண்டிய தீர்வைப் பணத்தைக் காண்க.

iv. வரி செலுத்திய பின் மோட்டார் வாகனத்தின் பெறுமதியைக் காண்க.

v. ரமணனின் வியாபார நிலையம் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருந்ததினால் 4% ஆண்டு வரிப்பணம் செலுத்த நேரிட்டது. அதற்கான ஆண்டு வரியாக ரூபா. 120 000 செலுத்தினார் எனின் காணியின் ஆண்டு மதிப்பீட்டுப் பெறுமானத்தைக் காண்க.

04. "சமகி" உள்ள 40 குடும்பங்களில் 2022 ஜனவரி மாதம் பயன்படுத்திய மின் அலகுகள் தொடர்பான விபரம் திரள் மீடிறன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| மின் அலகுகள் | வீடுகளின் எண்ணிக்கை | திரள் மீடிறன் |
|---|---|---|
| 30 - 40 | 4 | 4 |
| 40 - 60 | ------- | 16 |
| 60 - 70 | 10 | 26 |
| 70 - 80 | 11 | 37 |
| 80 - 90 | 3 | 40 |





i. அட்டவணையில் இடைவெளிகளை நிரப்புக.

ii. வலையுறு வரையத்தை பூரணப்படுத்துக.


iii. வலையுறு வரையத்தினூடாக மீடிறன் பல்கோணியை அமைக்க.

iv. அட்டவணையின் தரவு களின்படி திரள்மீடிறன் வளையியை தரப்பட்ட தளத்தில் வரைந்து வரை பிலிருந்து தரவின் இடை யத்தைக் கணிக்க.




05. பாத்திரம் ஒன்றில் ஒரே வடிவமுடைய 3 நீலப் பந்துகளும் 2 சிவப்புப் பந்துகளும் உள்ளன. வினாவிடைப் போட்டி ஒன்றிற்காக பாத்திரத்தில் இருந்து பந்து ஒன்று எழுமாறாக வெளியே எடுக்கப்பட்டு நிறம் அறியப்பட்டு மீண்டும் பாத்திரத்தில் இடப்படும் போது பெறப்படும் பந்து நீல நிறமாயின் தமிழ்ப் பாடத்துக்கான வினாவும் சிவப்பு நிறமாயின் கணிதப் பாடத்துக்கான வினாவும் வழங்கப்படும் என திட்டமிடப்பட்டது. போட்டியில் பங்குபற்றும் அனைவரும் இரண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

i. ரகு முதலாம் வினாவை தெரிவு செய்வதற்கான பூரணமற்ற மரவரிப் படத்தை பூரணப்படுத்துக.





ii. ரகு இரண்டாம் வினாவை தெரிவு செய்வதற்கான தரப்பட்ட மரவரிப்படத்தை விரிவுபடுத்துக.

iii. இரண்டு தடவையிலும் ஒரே பாடத்திலான வினா கிடைப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

(ஆ). i. ரகு 2 வினாக்களையும் தெரிவு செய்வதற்காக பாத்திரத் திலிருந்து வெளியே எடுத்த பந்துகளின் நிறங்களின் மாதிரி வெளியை தரப்பட்ட நெய்யறியில் புள்ளிட் இட்டுக் காட்டுக.

ii. அவர் தெரிவு செய்தது வேறுபட்ட இரு பாடங்களில் வினாக் களாவதற்கான நிகழ்வை புள்ளி வரைபில் குறித்து நிகழ்தகவைக் காண்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

**சாதனையாளர்கள் வரிசையில் இடம்பிடிக்கத் துடிக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 22.04.2023 அன்று உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கின்றார். சுமார் ஓராண்டு காலம் அங்கு வீற்றிருந்து அதன் பார்வையால் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பாக்கியங்களை வழங்குவார். "9 இல் குரு வந்தால் ஒளிமயமான எதிர்காலம் அமையும்" என்பார்கள். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் கனவுகள் நனவாக அவரது பார்வை கைகொடுக்கும். "ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்" என்பார்கள்.

**குரு இருக்கும் இடத்தின் பலன்!**

குரு பகவான் உங்கள் இராசிக்கு 5, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். பூர்வ, புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு பகவான் இப்பொழுது பாக்கிய ஸ்தானத்திற்கு வருகின்றார். நினைத்ததெல்லாம் நிறைவேறும் விதத்தில் சாதகமான பலன்களை அள்ளி வழங்கப் போகின்றார். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். உடனிருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும். கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். இதுவரை ஏற்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றாக இனி அகலும். தேவகுரு ஒன்பதில்வந்தால் தேகநலன் சீராகும். ஆவல்களும் நிறைவேறும் ஆதரவுக் கரம்கூடும். நாவசைத்தால் கேட்பார்கள் நாடெல்லாம் புகழ்பரவும். தாமதித்த திருமணமும் தயக்கமின்றி நடந்தேறும். என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வேகமாகப் பணிபுரிய உடல் ஒத்துழைப்புச் செய்யும். மோதல்கள் நிறைந்த வாழ்க்கையில் முத்தான பலன்கள் இனி கிடைக்கும். சாதனையாளர்கள் பட்டியலில் உங்கள் பெயரும் இடம் பெறலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்ற இன்ப அதிர்ச்சிகள் ஏராளமாகக் கிடைக்கும் நேரம் இது.

**வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!**

எத்தனை கிரகங்கள் பார்த்தாலும் குருவின் பார்வைக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதன் முத்தான பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைந்து நல்ல பலன்களை அள்ளி வழங்கப் போகின்றது. குறிப்பாக உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். தொழில் வெற்றிநடை போடும். பிறரைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இனித் தனித்து இயங்க முற்படுவர். காரிய வெற்றிக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். உத்தியோகத்தில் உயர்அதிகார்ரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு செயற்படுவர். குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால் வெற்றிகள் ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தொழில், உத்தியோகம், பொதுநலம், அரசியல் போன்றவற்றில் நீங்கள் நினைத்தவை நடைபெறும். பணியாளர்கள் பக்கபலமாக இருப்பார்கள். கடன் சுமை குறைய புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். வழக்குகள் சாதகமாக முடியும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைகின்றது. இதன் பலனாக உங்களுக்கு யோகங்கள் அனைத்தும் படிப்படியாக வந்து சேரப்போகின்றது. பிள்ளைகளுக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைத்து வருமானமும் சிறப்பாக அமையப் போகின்றது. ஆன்மிகப் பணியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். அதிகாரப் பதவிகள் கூட ஒரு சிலருக்கு கிடைக்கலாம். அசையாச் சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!**

அசுவதி நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் அசுவதி நட்சத்திரக் காலில் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். உங்களோடு பகை பாராட்டியவர்கள் நேச மனப்பான்மையுடன் நெருங்கிப் பழகுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஆதாயம் கிடைக்கும். ஊர்மாற்றங்கள் விரும்பத்தக்கதாக அமையும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து லாபத்தைப்பெற வழிவகுத்துக் கொடுப்பர். வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். பரணி நட்சத்திரக் காலில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் பாக்கிய ஸ்தானமான 9 ஆம் இடத்தில் பரணி நட்சத்திரக் காலில் சுக்கிரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது நிறைய சுபச்செய்திகள் வந்து கொண்டேயிருக்கும். விவசாயம், கால்நடை வளர்ப்பிலும் ஆர்வம் காட்டுவீர்கள். கணிசமான லாபம் கைகளில் புரளும். தொழில் போட்டிகள் அகலும். அரசாங்க வழியில் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் இருந்த தேக்கநிலை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமையை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும். கார்த்திகை நட்சத்திரக் காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது: குரு பகவான் பாக்கிய ஸ்தானமான 9 ஆம் இடத்தில் கார்த்திகை நட்சத்திரக்காலில் சஞ்சரிக்கும் பொழுது இனிய நிகழ்வுகள் ஏராளமாக நடைபெறும். உங்கள் இராசிநாதன் சூரியன் சாரத்தில் சஞ்சரிப்பதால் சிக்கல்கள் விலகும். வம்பு வழக்குகள் வந்த வழியிலேயே செல்லும். வரன்கள் வாசல் தேடி வரும். அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு அதிக பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பால் பிரச்சினைகள் படிப்படியாய் தீரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**ராகு-கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் குரு சஞ்சரிக்கும் காலத்தில் 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றார். இதுவரை குருவுடன் ராகு சேர்ந்திருந்தது. இப்பொழுது ராகு விலகிவிட்டதால் குரு கூடுதல் பலம் பெறுகின்றார். எனவே அவரது பார்வைக்கு பலன் அதிகம் கிடைக்கும். அதேநேரம் 8 இல் ராகு சஞ்சரிப்பதால் இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். மறைந்த ராகுவால் நிறைந்த தனலாபம் உண்டு. எனவே பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத்தும். தேக்கநிலையில் இருந்த காரியங்கள் ஒவ்வொன்றும் துரிதமாக நடைபெறும். கேதுவின் சாரத்தில் ஆன்மிகப்பணிகளுக்கு அள்ளிக் கொடுப்பீர்கள். புதிய வாகனம் மற்றும் வீடு வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். அவர்களுக்கு உத்தியோகம் கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்களும் வரலாம். வீடு மாற்றங்களால் ஒருசிலர் நன்மை அடைவர்.

**குருவின் வக்கிர காலம்!**

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக் காலில் வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். நாடு மாற்றங்களும் வீடு மாற்றங்களும் ஏற்படலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. வீண் விரயங்கள் அதிகரிக்கும். விலை மதிப்புள்ள பொருட்களைக் கையாளும் பொழுது கவனம் தேவை. கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவது போல இருந்து கைநழுவிச் செல்லலாம். தனவரவில் தடைகள் ஏற்படலாம். தடுமாற்றங்கள் அகல இடமாற்றங்கள் கைகொடுக்கும். பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் உண்டு.




**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி அற்புதப் பலன்களை அள்ளி வழங்கப் போகின்றது. அமைதியும் ஆனந்தமும் இல்லத்தில் குடிகொள்ளும். வருமானம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக கிடைக்கும். கணவன்-மனைவி உறவில் பாசமும் நேசமும் அதிகரிக்கும். தாய் வழியிலும் உடன்பிறப்புகள் வழியிலும் ஓரளவு உதவி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். சுபச்செலவுகள் அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்குப் பல நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு இப்பொழுது கிடைக்கலாம்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜையறையில் கந்தப் பெருமான் படம் வைத்து கவசம் பாடி வழிபடுவது நல்லது. சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அனுமன் கவசம் பாடி அருகில் இருக்கும் அனுமன் ஆலயம் சென்று வழிபட்டு வந்தால் இனிய பலன்கள் இல்லத்தில் நடைபெறும்.

(தொடரும்)

# புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!



## ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 166





அது என் அதிர்ஷ்டம்! என்றாலும், எதற்குக் கோபம் என்று சொல்ல வேண்டாமா? உன் தேன் மதுரக் குரலைக் கேட்க என் காது தாபம் அடைந்து தவிக்கின்றதே?" என்று கெஞ்சினார் ஆயிரம் போர்க் களங்களில் வெற்றி கண்ட அந்த மகா வீரர்.

"தாங்கள் என்னைப் பிரிந்து போய் எத்தனை நாள் ஆயிற்று? முழுமையாக நாலு நாள் ஆகவில்லையா?" என்று சொன்ன நந்தினியின் குரலில் விம்மல் தொனித்தது. அது எத்தனையோ வாள்களையும் வேல்களையும் தாங்கி நின்றும் தளராத பழுவேட்டரையரின் நெஞ்சத்தை அனலில் இட்ட மெழுகைப்போல் உருக்கி விட்டது.

"இதற்காகத்தானா இவ்வளவு கோபம்? நாலு நாள் பிரிவை உன்னால் சகிக்க முடியவில்லையா? நான் போர்க்களத்துக்குப் போக நேர்ந்தால் என்ன செய்வாய்? மாதக்கணக்காகப் பிரிந்திருக்க நேரிடுமே?" என்றார்.

"தாங்கள் போர்க்களத்துக்குப் போனால் மாதக்கணக்கில் தங்களை நான் பிரிந்திருப்பேன் என்றா எண்ணினீர்கள்? அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். தங்களுடைய நிழலைப் போல் தொடர்ந்து நானும் போர்க்களத்துக்கு வருவேன்.."

"அழகாயிருக்கிறது! உன்னைப் போர்க்களத்துக்கு அழைத்துப் போனால் நான் யுத்தம் பண்ணினாற் போலத்தான்! கண்மணி! இந்த மார்பும் தோள்களும் எத்தனையோ கூரிய அம்புகளையும் வேல் முனைகளையும் தாங்கியதுண்டு. அவ்வாறு ஏற்பட்ட காயங்கள் அறுபத்து நான்கு என்று உலகோர் என்னைப் புகழ்வதுமுண்டு. ஆனால் உன்னுடைய மிருதுவான மலர் மேனியில் ஒரு சிறு முள் தைத்து விட்டால், என்னுடைய நெஞ்சு பிளந்து போய்விடும். எத்தனையோ வாள்களும் வேல்களும் என்னைத் தாக்கிச் சாதிக்க முடியாத காரியத்தை உன் காலில் தைக்கும் சிறிய முள் சாதித்து விடும். உன்னை எப்படி யுத்த களத்துக்கு அழைத்துப் போவேன்? நீ இத்தனை நேரம் கருங்கல் தரையில் நின்று கொண்டிருப்பதே எனக்கு வேதனையாயிருக்கிறது. இப்படி வந்து உன் மலர்ப் படுக்கையில் வீற்றிரு! உன் திருமுகத்தைப் பார்க்கிறேன். நாலு நாள் பிரிவு உனக்கு மட்டும் வேதனை அளித்தது என்று நினையாதே! உன்னைக் காணாத ஒவ்வொரு கணமும் எனக்கு ஒரு யுகமாயிருந்தது. இப்போதாவது என் தாபம் தீர, உன் பொன் முகத்தைப் பார்க்கிறேன்!" என்று கூறி, நந்தினியின் கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு போய் மஞ்சத்தில் உட்கார வைத்தார்.

நந்தினி தன் கண்களைத் துடைத்துக் கொண்டு பழுவேட்டரையரை நிமிர்ந்து பார்த்தாள். தங்க விளக்கின் பொன்னொளியில் அவளுடைய முகத்தில் மலர்ந்த முத்து முறுவலைப் பார்த்தார் தனாதிகாரி. ஆகா! இந்தப் புன்சிரிப்புக்கு மூன்று உலகத்தையும் கொடுக்கலாமே? மூன்று உலகமும் நம் வசத்தில் இல்லாதபடியால், நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் இவளுக்காகத் தத்தம் செய்யலாம்! ஆனால் இவளோ நம்மிடம் ஒன்றும் கேட்கிறாள் இல்லை! இவ்விதம் எண்ணினார் அந்த வீராதி வீரர். அவளைக் கேள்வி கேட்பது, கடிந்து கொள்வது என்கிற உத்தேசம் போயே போய் விட்டது! நந்தினி காலால் இட்ட பணியைத் தலையால் நடத்தி வைக்கும் நிலைமைக்கு வந்து விட்டார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மூட்டையை வைத்தால்

(நேற்றைய தொடர்ச்சி.)



வைத்தால் எனக்குத் தெரிந்து விடும். என்னை ஏமாற்ற முடியாது. மூட்டையைக் கீழே வைத்தால் வைக்காதே என்று குரல் கொடுப்பேன்.

இருட்டுவதற்குள் இந்த மூட்டையை என் அம்மாவிடம் சேர்த்து விடுங்கள். அவரிடம் அடுத்த வாரம் வேறு அழுக்கு மூட்டை கொண்டு வருகிறேன். இதைத் துவைத்து வையுங்கள். அப்பொழுது எடுத்துச் செல்கிறேன் என்று சொல்லுங்கள். அங்கே அதிக நேரம் தங்காதீர்கள் உடனே புறப்பட்டு விடுங்கள் என்றாள் அவள்.

சூழ்ச்சியை அறியாத அவன்மூட்டையை தூக்கிக் கொண்டு புறப்பட்டான்.

மூட்டை மிகவும் கனமாக இருந்தது. அழுக்கு மூட்டையா இவ்வளவு கனம்? கீழே வைத்து விட்டு இளைப்பாறலாம் என்று நினைத்தான் அவன்.

தோளில் இருந்து மூட்டையைக் கீழே இறக்க முயற்சி செய்தான்.

அதற்குள் இருந்தவள், நான் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். மூட்டையைக் கீழே வைக்காதே, என்று குரல் கொடுத்தாள்.

மாளிகைக்குள் இருக்கும் பெண்தான் பேசுகிறாள். எவ்வளவு தொலைவில் நடப்பதும் அவள் கண்களுக்குத் தெரிகிறதே? இறக்கி வைத்தால் நம்மைப் பற்றித் தப்பாக நினைப்பாளே, என்று நினைத்தான் அவன். மூட்டையைத் தூக்கிக் கொண்டே நடந்தான்.

ஒரு வழியாக வீட்டை அடைந்தான் அவன். கதவைத் தட்டி, அம்மா! உங்கள் பெண் அழுக்குத் துணி மூட்டையை அனுப்பி இருக்கிறாள். நன்கு துவைத்து வையுங்கள். அடுத்த வாரம் வேறு துணி மூட்டையுடன் வருகிறேன். அப்பொழுது இதை எடுத்துச் செல்கிறேன். எனக்குத் தங்க நேரம் இல்லை. உடனே வீடு திரும்ப வேண்டும், என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் அவன். அடுத்த வாரம், தன் இரண்டாவது அக்காவை மூட்டைக்குள் வைத்துக் கட்டினாள் அவள்.

வழக்கம் போல அவளையும் தூக்கிச் சென்றான் அவன். வழியில் மூட்டையை வைக்க அவன் முயற்சி செய்தான். மூட்டையைக் கீழே வைக்காதே நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன், என்ற குரல் கேட்டது.

எப்படியோ ஒரு வழியாக அவள் வீட்டை அடைந்தான். வீட்டு வாசலிலேயே அவனுக்காகத் துணி வெளுப்பவள் காத்திருந்தாள்.

அவளைப் பார்த்து அவன், அம்மா! உன் மகள் அழுக்குத் துணி அனுப்பி இருக்கிறாள். ஒரு வாரத்திற்குள் எப்படித்தான் இவ்வளவு துணி சேர்கின்றதோ தெரியவில்லை. இதையும் வெளுத்து வையுங்கள். அடுத்த முறை வரும்போது இரண்டு மூட்டை துணிகளையும் எடுத்துச் செல்கிறேன். இப்பொழுது மிகவும் களைப்பாக இருக்கிறேன். நான் வருகிறேன், என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் அவன்.

தன் இரண்டாவது மகளும் வந்து சேர்ந்ததை எண்ணி மகிழ்ந்தாள் அவள்.

களைப்புடன் மாளிகைக்கு வந்து சேர்ந்தான் அவன். என் வீட்டில் துணி மூட்டையைச் சேர்த்து விட்டீர்களா? என்று கேட்டாள் அவள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை சிந்தும் கரங்கள் உயரட்டும்!
நாளைய உலகை இனிதே ஆளட்டும்!
– லெனின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உழைப்பாளர்களால் இயங்குகின்ற உலகம்

இன்று மே தினம். சர்வதேச உழைப்பாளர் தினம்.

உலக வரலாற்றில் உழைப்பாளர்களின் உரிமை நிலைநாட்டப்பட்டநாள்.

ஒரு காலத்தில் உழைப்பாளர்கள் வாட்டி வதைக்கப்பட்டனர்.

அவர்களின் குருதி வியர்வையாய் உறிஞ் சப்பட்டது.

உரிய ஊதியம் இல்லை. ஓய்வு இல்லை. விடுமுறை இல்லை. எந்நேரமும் உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து போயினர்.

இவ்வாறான அடக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த உழைப்பாளர் வர்க்கம் தனக் கான நீதியை – உரிமையை நிலைநாட்டிய நாளே மே தினமாகும்.

அன்று நம் தொழிலாளர் வர்க்கம் போரா டிப்பெற்ற உரிமையை நினைவேந்துவது எங் கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அதேநேரம் உழைப்பாளர்களைப் போற்று கின்ற நாளாகவும் இன்றைய மே தினம் அமைகிறது.

ஆம், இந்த உலகம் தொழிலாளர்களின் கடின உழைப்பால் இயங்குகிறது.

இந்த உலகத்தின் இயங்குநிலைக்கு மூல காரணர்களாக இருக்கக்கூடிய தொழிலா ளர்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

அதேநேரம் உலகம் முழுவதிலும் இருக் கக்கூடிய அனைத்துத் தொழிலாளர்களதும் உரிமை நிலைநாட்டப்பட்டுள்ளதா? என்று யார் கேட்டாலும் அதற்கான பதில் இல்லை என்பதாகவே இருக்க முடியும்.

ஆம், இன்றும் உரிய ஊதியம் கிடைக்கப் பெறாமல் தங்கள் வியர்வையை நிலத்தில் சிந்துகின்ற தொழிலாளர் வர்க்கம் இருக் கவே செய்கிறது.

இதற்கான உதாரணத்துக்கு நாம் வேறு எங்கும் செல்லத் தேவையில்லை. நம் மலை யகத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை இதற்குப் போதுமானதாகும்.

உண்மை. எங்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் உரிய ஊதியம் கிடைக்கப்பெறாமல் துன்புறுகின்றனர்.

அவர்களின் வதிவிடம் அவர்கள் வாழு கின்ற மலைப் பிரதேசம் என்பன மிகுந்த ஆபத்தானவை.

மண்சரிவு ஏற்படும் போதெல்லாம் அதற் குள் புதையுண்டு போவதற்குத் தயாராக இருக்கின்ற மலையகத் தொழிலாளர்களின் அவலத்தை இன்னமும் உரியவர்கள் திரும் பிப் பார்க்காத நிலைமை இருக்கவே செய் கிறது.

எனவே மே தினமாகிய இந்நாள் தொழி லாளர்களின் வேலைநேரம் நிர்ணயம் செய் யப்பட்டு அவர்களின் உரிமை நிலைநாட்டப் பட்ட நாள் என்பது மட்டுமல்ல,

உலகின் எந்தமூலையில் தொழிலாளர் வர்க்கம் துன்புற்றாலும் அவர்களின் நல னுக்காகக் குரல் கொடுக்கின்ற நாளாகவும் மே நாள் அமைய வேண்டும்.

அப்போதுதான் தொழிலாளர் வர்க்கம் தலைநிமிர்ந்து வாழும். அவர்களின் வாழ்வி னூடு இந்த உலகம் உன்னதம் அடையும்.

# வடக்கு கிழக்கில் மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம்

## ஐ.நா விடம் சுமந்திரன் எடுத்துரைப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் மீண்டுமொரு மோதல் உருவாகக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் எட்வேர்ட் ரீஸ், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் விசேட பிரதிநிதி சனா ரஸ்லா ஆகியோருக்கும் சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கூறிய விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வரும் காணி அபகரிப்பு, தொல்பொருள் வளச்சுரண்டல் என்பன தொடரும் பட்சத்தில் இந்நிலை ஏற்படலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இத்தகைய முறையற்ற செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தும்படி ஐ.நா அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின்போது இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதை இலக்காகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்பட்டுவரும் மோதல் தடுப்புச் செயற்திட்டம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதன்படி இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான செயற்திட்டங்கள் முன்னர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டன? இனிவருங்காலங்களில் அவற்றை எவ்வாறு முன்னெடுக்கலாம்? என்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கையில் உருவாகக் கூடிய சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கும் இருவிதமான மோதல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்த எம்.ஏ. சுமந்திரன், அவற்றை உரியவாறு கையாள்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தியுள்ளார். (4)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா ஸமேத ஸ்ரீ காயாரோஹண சுவாமி தேவஸ்தான மஹோற்சவமானது இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 19 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர் வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை பஞ்ச இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை சிவானந்த தீர்த்தத்தில் தீர்தோற்சவமும் மாலை கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவமும் இடம்பெற்று,

20 ஆம் நாள் திருக்கல்யாண உற்சவமும் 21 ஆம் நாள் வைரவர் சாந்தி உற்சவமும் நடைபெறவுள்ளது. (4-7)

## குடி போதையில் தகராறு அண்ணனை கொன்ற தம்பி

(கொழும்பு)

வெல்லவாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொன்கஹருப்ப, கால்வாய் வீதி பகுதியில் நபர் ஒருவர் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 32 வயதான கொன்கஹருப்ப, கால்வாய் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவராவார்.

காணி ஒன்று தொடர்பில் நீண்டகாலமாக நிலவி வந்த தகராறு காரணமாக உயிரிழந்தவர் தனது இளைய சகோதரன் நடத்தும் இரவு உணவகத்திற்கு குடிபோதையில் வந்ததாகவும், வாக்குவாதம் முற்றி இளைய சகோதரன் கத்தியால் குத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கத்தி குத்தில் பலத்த காயமடைந்த நபர் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (4)

## கலைப்பீட மாணவர்களுக்கு இனி இரண்டு பட்டங்கள்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் கலைப் பீடங்களில் சேரும் மாணவர்களுக்கு எதிர்வரும் வருடம் முதல் 02 பட்டங்கள் வழங்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கலைப் பட்டப்படிப்புக்கு மேலதிகமாக தொழில்நுட்பம் மற்றும் கணனி விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பட்டம் பெறுவதற்கான வாய்ப்பும் மாணவர்களுக்கு கிடைக்கும் என அதன் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலமாக கலைப்பீட மாணவர்களுக்கு இரண்டு பட்டங்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (4)

## புதிய நிறுவனங்களில் QR இன்றி எரிபொருள்

(கொழும்பு)

இலங்கையின் சில்லறை எரிபொருள் சந்தையில் பிரவேசிக்கத் திட்டமிட்டுள்ள இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் எரிபொருள் நிலையங்களை அமைக்க முன்மொழிந்துள்ளன.

இலங்கை அரச அதிகாரிகளுக்கும், சீனாவுக்கு சொந்தமான சினோபெக் மற்றும் அமெரிக்காவை தளமாகக் கொண்ட RM Parks-Shell ஆகிய இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையேயான அண்மைய கலந்துரையாடலின்போது இந்த முன்மொழிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவுகளுக்கு அரச அதிகாரிகள் தமது உடன்பாட்டை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வெளியூர் பகுதிகளில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு இது பொருந்தும் என்றும் அரச அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த எரிபொருள் நிலையங்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள கியூ.ஆர் முறையின் கீழ் எரிபொருள் வழங்குவதில் இருந்து விலக்கு அளிக்கப்படலாம் என்றும் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இரண்டு வெளிநாட்டு எரிபொருள் நிரப்பு நிறுவனங்களும், நவீன வணிக மையங்களின் அடிப்படையில் எரிபொருள் நிலையங்களை உருவாக்க விரும்புகிறார்கள். (4)

## பெரமுனவின் மே தின பேரணியில் கோட்டா இல்லை

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பதவி விலகிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ளமாட்டார் என பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையில் இந்த பேரணி நடைபெறவுள்ளதாக அளுத்கமகே தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்ள மாட்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த பேரணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அவர் கலந்து கொள்ளாமல் பேர ணிக்கு வாழ்த்துக்களை மட்டும் அனுப்புவதாகவும் அவர் கூறினார்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 12

எனவே இலங்கையை வளைப்பதன் மூலம் ஐ.நா பாதுகாப்பு அவையில் கொண்டு வரும் தீர்மானத்தினை தகர்க்கலாம் என திட்டம் போட்டு கச்சதீவினை தாரை வார்க்கும் திட்டத்தினை தமிழகத்தை கேட்காமலே முன்னெடுத்தார் இந்திரா காந்தி என்று தமிழ் நாட்டு அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

### இலங்கையின் கண்ட திட்டு

இலங்கையின். ஆட்புலக் கடற்பகுதி இலங்கையின் கிழக்கேயும் தெற்கேயும் 200 மைல் தூரத்திலும் மேற்கே 18 மைலிலிருந்து 158 மைல்கள் வரையிலும் அமைந்துள்ளது. (ஒரு பாகை =69.5 மைல் அல்லது 112 கி.மீ ஆகும்)

கண்டங்களின் கரையோரங்களை அண்டி அமைந்துள்ள திட்டான பகுதி கண்டத்திட்டு எனப்படுகின்றது. இது ஆழம் குறைந்த கடற்பரப்பினால் மூடியிருக்கும். கண்டத்திட்டு முடியும் இடத்தில் பெரும்பாலும் சடுதியான சரிவு காணப்படும்.

இதுதிட்டுமுடிவு ஆகும். திட்டு முடிவுக்குக்கீழ்க்கண்டச்சரிவு என அழைக்கப்படும் பகுதியும் அதற்கும் கீழே கண்டஎழுச்சியும் காணப்படும். இக்கண்டஎழுச்சி இறுதியில்கடல் மிக ஆழமான கடலடித்தளத்துடன் சேரும்.

கண்ட மேடைகள் (கண்டத்திட்டு) ஆழம் குறைந்த கடல்படுக்கைகளாகக் காணப்படுவதால் மீன்பிடிக் கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் படிவுகளை அகழ்தல் என்பவற்றிலும் முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகின்றது. கண்ட எல்லைக்கு அப் பாற்பட்ட பகுதிகள் சர்வதேச கடற் பரப்பின் ஒரு பகுதியாகும்.

கடலோர நாடுகள் தங்களது கண்டத்திட்டில் உயிர்வாழும் மற்றும் உயிரற்ற வளங்களை ஆராய்ந்து சுரண்டுவதற்கான ஃ அனுபவிப்பதற்கான பிரத்தியேக உரிமையைக் கொண்டுள்ளன.

கடலோர நாடுகள் தங்கள் கண்டத்திட்டுப் பகுதியல் சுற்றுச் சூழலைப்பாதுகாக்க வேண்டிய கடமையைக் கொண்டுள்ளன, மேலும் பிறநாடுகள் கண்டத்திட்டுப்பகுதியைசில நோக்கங்களுக்காகப் (அதாவதுகுழாய் மற்றும் கேபிள்களை இடுவது போன்றவை) பயன்படுத்த அனுமதிக்க வேண்டியது அந்நாடுகளின் கடமையாகும்.

அனைத்து கடலோர நாடுகளிலும்ஒ ருகண்டதிட்டு உள்ளது, இதுநாட்டின்தளக்கோட்டிலிருந்து 200 கடல் மைல்கள் கடலுக்குள் நீண்டுள்ளது (1 கடல்மைல் ஸ்ரீ 1.852 கி.மீ). எனவே பலநாடுகள்தங்கள் கண்ட திட்டுபற்றி மேலதிக தரவுகளை சேகரிக்க தேவையில்லை அல்லது அவற்றின்கண்டத் திட்டின வெளி வரம்பைக் கருத்தில்கொள்ள வேண்டியதில்லை.


கரையோர நாடுகள் தங்கள் கரையிலிருந்து 200 கடல்மைல் நீளமுள்ள பொருளாதார தனியுரிமைவலயங்களை நிறுவுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளன, மேலும் இந்த நாடுகள் தானாகவே கண்டத்திட்டு களையும் (200 கடல்மைல்) ஒரே தூரத்தை நீட்டிப்பதால், பொருளாதாரதனியுரிமை வலயம் மற்றும்கண்டத் திட்டுக்கள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று மேல் பொருந்தும்.




கண்ட எல்லை (Continental margins)

இருப்பினும், 200 கடல் மைல்களுக்கு அப்பால் நீண்டு செல்லும் நீரடி நீடித்த புவியியல் மற்றும் கண்டத்திட்டுகளைக் கொண்ட நாடுகள் இவற்றை ஆவணப் படுத்த வேண்டும். இந்த தகவல் நியூயார்க்கை தளமாகக் கொண்ட வரம்புகள் குறித்த ஒரு சர்வதேச ஆணையத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

அத்தகவல்களுக்கான ஒப்புதலை கண்டத்திட்டு வரம்புகள் ஆணையத்திடமிருந்து பெறல் வேண்டும். அப்போது தான் கடலோரநாடு அதன்கண்டதிட்டின் வெளிப்புற வரம்புகள் (200 கடல் மைல்களுக்குமேற்பட்ட) பற்றிய தீர்மானம் மற்றும் அதற்கு




கட்டுப்படுதல் போன்றவற்றை நிறுவ முடியும்.

இலங்கைக் கடலானது, பல கண்ட மேடைகளையும் குடாக கடல் பொட்டலங்களையும் கொண்ட, அரும்பெரும் பொக்கிசக் கடலாகும். கிழக்குக் கடல் தவிர்ந்த ஏனைய இலங்கை சூழ் கடலானது, கண்டமேடைகளால் நிறைந்தவை. இதில் பாதியளவு வடமாகாணத்தில் உள்ளது. பாக்கு நீரிணை ஆழம் குறைந்த கடற்பகுதியாக இருந்தும் வருவதால், இக்கண்டமேடை வடமாகாணத்தில் அகலமாகவும், அதிகமாவும் காணப்படுகிறது.

கடற்கரையில் இருந்து 200 மீற்றர் வரையான ஆழ்மான கடற்பகுதியே இந்தக் கண்டமேடைகளாக அமைகிறது. இதன்படி இலங்கையில், 2, 620,000 எக்டர் பரப்பளவுள்ள கண்டமேடைகள் காணப்படுகிறது. இதில் 1;502, 240 எக்டர் பரப்பளவு வடமாகாணத்தில் இருக்கிறது.

சூரிய வெளிச்சத்தைப் பயன்படுத்தி (ஒளித்தொகுப்பு) கடலிலே நடக்கிற தாவர உற்பத்தி, கண்ட மேடைகளிலே அதிகம் நடக்கிறது. கடலின் அடிப்படை உற்பத்தியின் ஊற்று வாயாகவும் இதுவே இருக்கிறது. கடலில் மிதக்கும் தாவர நுண்ணுயிர்கள் பெருகப்பெருக, இதை உண்ணும் நுண்ணுயிர் விலங்கினாங்களும் பெருகுகின்றன.

நுண்ணுயிர் விலங்கினத்தை நம்பி வாழும் மீனினங்களும், ஏனைய விலங்கினங்களும் இதற்கேற்ப பல்கி பெருகுகின்றன. மீன்களின் இனப் பெருக்கத்துக்கு அல்காதயற்றம் போன்ற நுண்ணுயிர் தாவரங்கள் மீன்களுக்கு உணவாகி வருவதே காரணமாகும். இவ்வுணவை உண்ணும் மீன்கள் இயற்கையாகவே இறக்கும் போது, அதன் சேதன மற்றும் கனிப்பொருட்கள் மீண்டும் இத் தாவரங்களுக்கு உணவாகியும் விடுகிறது. இப்படி ஒரு உணவுச் சங்கிலிச் சுழற்சித் தொடர்தான் இயற்கை மீன்வள உற்பத்தியாகும்.

மன்னார் வளைகுடா, பாக்கு விரிகுடா மற்றும் பாக்கு நீரிணை என்பனவற்றின் சேற்றுத் தன்மையான அடிப்பகுதியால், பாக்கு விரிகுடா, மற்றும் பாக்கு நீரிணை என்பன உயர்தர இறால் இனங்களுக்கான வாழிடங்களாகவுள்ளன.

இப்பகுதிகளின் ஆழம் குறைந்த கடலின் அடிப்பகுதிகள், தனித்துவமான, அசைவற்ற கடல் அடிமட்ட உயிரினங்களை அதிகளவில் கொண்டிருக்கின்றன.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடுக்குநாறி...

இதனையடுத்து வெள்ளிக்கிழமை ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இந்நிலையில், விக்கிரகங்கள் வைப்பு செய்யப்பட்டமை மற்றும் ஆலயத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் பார்வையிடுவதற்காக குறித்த வழக்கில் ஆலயம் சார்பிலும், பாதிக்கப்பட்ட தரப்புக்கள் சார்பிலும் மன்றில் ஆஜராகி வாதப் பிரதி வாதங்களை முன்வைத்த சட்டத்தரணிகள் குழு விஜயம் செய்திருந்தது.

இதில், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், வவுனியாவின் சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருஅருள், சட்டத்தரணிகளான திலீப் காந்தன், கீர்த்தனன், இளஞ்செழியன், திபின்சன் உள்ளிட்ட சட்டத்தரணி குழு சென்றிருந்தது. (4-7)

## இன்னும் ஒரு...

பது மிகவும் தீவிரமானது என்றும் எனவே இதற்காக சட்டத்தரணியின் உதவியையும் நாடவுள்ளதாக ஹரோல்ட் அந்தோனி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

தற்கொலை தாக்குதல்களின் அறிக்கைகள் அடங்கிய ஆறு குறுந்தகடுகளை (சிப்) கடந்த வார இறுதியில் மறைமாவட்டத் தலைவரிடம் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கையளித்திருந்தார்.

இந்த விசாரணை அறிக்கைகள் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் கவனத்தை ஈர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## தமிழ் அரசியல்...

காட்டினார்.

இதனூடாக அவர்கள் தங்கள் சுயலாப அரசியலை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் குற்றம் சாட்டினார்.

ஹர்த்தால் போராட்டங்கள் மூலம் எதையும் சாதிக்க முடியாது என்றும், தமிழ் மக்களை ஏமாற்றவே இப்படியான போராட்டங்களைத் தமிழ்க் கட்சியினர் நடத்துகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (4-7)

## மின்சாரம் தாக்கி...

சூடி வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்வராசா சசிதரன் (வயது - 40) என்பவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,33)

## எரிபொருள்...

டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக ஒரு லீற்றர் பெற்றோல் 7 ரூபாயினால் குறைக்கப்படுவதுடன், அதன் புதிய விலையாக 333 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒக்டேன் 95 ரக ஒரு லீற்றர் பெற்றோல் 10 ரூபாயினால் குறைக்கப்படுவதுடன், அதன் புதிய விலையாக 365 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலையை 15 ரூபாயினால் குறைத்துள்ளதுடன், அதன் புதிய விலையாக 310 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 135 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 330 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (4-7)

## வடக்கின்...

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆளுநர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தற்போதைய ஆளுநர்கள் அனைவரும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது நியமனம் பெற்றவர்கள். எனினும், பதவியேற்ற கையோடு ரணில் ஆளுநர் மாற்றங்களைச் செய்யவில்லை.

இந்நிலையில் அடுத்தடுத்த ஆண்டுகளில் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் தற்போது ஆளுநர் பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் பதவியைப் பெறப் பலரும் முயற்சித்து வந்த நிலையில் நன்கு தமிழ் தெரிந்த சிங்கள இனத்தவரான ஜோன் அமரதுங்க நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிய முடிந்தது. (4-7)

## தலைவர்...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிரபாகரன் எனது அண்ணன். ஒரு தவறு நடந்தால் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பவர் அவர் என்றும் அந்தப் பெண்மணி கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவரின் கருத்து சமூகவலைத் தளங்களில் வைரலாகி வருகிறது. (4)

## உள்ளக விடயங்...

அவர் கூறினார்.

நீங்கள் என்ன செய்ய வேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்பது உங்களது (இலங்கை) விருப்பம். இதில் யாரும் தலையிடமுடியாது. இது உங்களுக்குள் இருக்கும் பிரச்சினை, எனவும், ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. "கண்ணாடியால் ஆன வீட்டில் குடியிருந்தால் அங்கிருந்து கற்களை எறியாதீர்கள்!" என்பதே அது என்றும் லிவன் ஜகாரியன் தெரிவித்தார். (4-7)

## மகிந்...

இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்கு பொதுஜன பெரமுனவினர் வழங்கிய வாக்குகள் பெறுமதியற்றவை ஆகும்.

தத்தமது அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக மாத்திரமே அவர்களது கைகள் உயர்த்தப்பட்டன. மக்களுக்காக அவர்கள் வாக்களிக்கவில்லை. மக்கள் ஆணை பெற்ற எவரும் அங்கத்துவம் பெறாத தற்போதைய பாராளுமன்றம் செல்லுபடியற்றதாகவே காணப்படுகிறது.

மறுபுறம் மே தினக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கான கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. மே தினத்தை அடிப்படையாகக் கொண்டு பழைய தலைவர்களை மீண்டும் பதவிகளில் அமர்த்துவதற்கு பொதுஜன பெரமுன முயற்சித்து வருகிறது.

ராஜபக்ஷர்களை மீண்டும் முன்னிலைப் படுத்துவதற்காகவே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே மீண்டும் நாட்டின் தலைவரானால் அதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும் என்றார். (4-7)


மணமகன் தேவை
யாழ் இந்து கௌரவ 1991ல் பிறந்த மூலம் 1ம் பாதம் கி.பாவம் 39 1/4, அரசபணி புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
077 616 1739

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 30/04/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1557 — கடகம் 0 7 7 1 9 4 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1132 — O 01 30 37 59

கொவிசெத — திகதி 2023.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் 3344 — K 49 55 61 70 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 30/04/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1450 — W 08 36 43 60 75

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் 411 — கடகம் 13 14 23 60 கடகம் — தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத — திகதி 2023/04/30 — சீட்டிழுப்பு இலக்கம் 5102 — U 0 8 5 3 8 0 — தேசிய லொத்தர் சபை

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2076 — நிறம் செம்மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2023.04.30 — தினம் ஞாயிற்றுக்கிழமை — G 04 09 53 65 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,098,280/- — DLB

சனிதா — ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு திகதி 2023.04.30 — சீட்டிழுப்பு இல: 4237 — வர்ணம்: இளஞ்சிவப்பு — ரூ. 3,382,400/- — வெற்றி இலக்கங்கள் 06 16 23 68 — ஆங்கில எழுத்து P — DLB

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 318 — சீட்டிழுப்பு திகதி 2023.04.30 — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி இலக்கங்கள் 02 33 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,363,100/- — DLB

ராசி — சுப்பர் ஜக்போட் ரூ. 2,610,410.40 — திகதி 2023-04-30 — வெற்றி வாரம் 3786 — வர்ணம் ஊதா — வெற்றி இலக்கங்கள் 12 40 48 51 — சிம்மம் — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,178,300/- — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — R 28 05 12 25 48 — சீட்டிழுப்பு வாரம் 1252 — மஞ்சள் — திகதி 2023.04.30 ஞாயிற்றுக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 326,684,831/- — DLB — தொலை பேசி: 011-2 333 546-47 — Web: www.dlb.lk

அதகோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1902 — வர்ணம்: இளம் பச்சை — சீட்டிழுப்பு திகதி: 2023.04.30 — ரூ. 4,557,920/- — வெற்றி இலக்கங்கள் 02 13 46 50 — ஆங்கில எழுத்து R — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1ம் ஆண்டு நினைவு தின அழைப்பு

கடந்த 12.05.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி
## துரைராசா கனகம்மா



அவர்களின் 1ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (01.05.2023) திங்கட்கிழமை மதியம் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(15420)

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

இங்ஙனம்: குடும்பத்தினர்
மதனகுமார் (மகன்) 077 996 5453

# மோட்டர் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவிலுள்ள தோட்டக்காணியிலிருந்து தண்ணீர் இறைக்கும் மோட்டர் திருடப்பட்டுள்ளது.

தோட்டத்திலுள்ள மோட்டர் அறை உடைக்கப்பட்டு இந்த திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (4)


நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?

இன்றே பாவியுங்கள்.

சித்தாரா
துளசி
அசமோதகம் பாணி

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567
(குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(C-6456)

www.edus.lk
EDUS
Learning made lovable
தமிழ் | සිංහල | English

G.C.E O/L 2022
மாணவர்களுக்கான
மாபெரும் இறுதி
கருத்தரங்கு

ஆங்கிலம்
வரலாறு விஞ்ஞானம் கணிதம் தமிழ்





- முன்னோடி ஆசிரியர்களின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் & Recordings.
- முக்கிய குறிப்புகளுடன் கூடிய தெளிவான விளக்கங்கள்.
- மாணவர்களின் வெற்றிக்கு பரீட்சை எழுத முன்னரான ஆயத்தங்கள் தொடர்பான முழு அறிவுறுத்தல்களும் ஊக்குதலும் கருத்தரங்கின் இறுதிநாள் இலங்கையின் சிறந்த வள்வாளரால் நடைபெறும்.
- கீழ்க்காணும் வங்கிக்கணக்கிற்கு பணம் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டினை மாணவர் பெயர்,பாடசாலை மற்றும் WhatsApp இலக்கம் போன்றவற்றுடன் 0777 123 330 க்கு May 1 ம் திகதிக்கு முன்னராக அனுப்பி இணைந்துகொள்ளவும்.

(15414)

ரூ. 2,000
5 பாடங்களுக்குமான மொத்த கட்டணம்

May 1 - 12
தினமும்
மாலை 7 மணி

Bank of Ceylon
EDUS Lanka (PVT) Ltd.
A/C No : 87979133
Branch : Kokuvil

மேலதிக விபரங்களுக்கு :
0777 123 330 / 011 44 77 488

APPLY NOW

அனுமதிகளுக்கு முந்துங்கள்..!


## மணமகள் தேவை

1993 இல் பிறந்த ஆயிலிய நட்சத்திரம் செவ்வாய் குற்றமற்ற இந்து வெள்ளாளர் தனியார் துறையில் தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு மணமகள் தேவை

(15423)

074 106 3204

## வேலையாட்கள் தேவை

வீட்டு வேலைக்கு பணிப்பெண் ஒருவர் தேவை

இடம் – கோண்டாவில்,யாழ்ப்பாணம்

(15417)

077 713 0872


IELTS - New Batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance
Grammar Classes, First Class
(Free of Charge)
இல. 53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

(15419)

VILLAGE HOTEL
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE





அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்

077 544 8503

(15337)


# நீங்கா நினைவுகளுடன்

## 1ஆம் ஆண்டு    2ஆம் ஆண்டு

கடந்த 12.05.2022 அன்று சிவபதமடைந்த எமது மகன்

அமரர்
## பாலசுப்பிரமணியம் நிபோஜன்

கடந்த 08.11.2020 அன்று சிவபதமடைந்த எமது மகள்

அமரர்
## பாலசுப்பிரமணியம் நிபோஜனா



தோற்றம்
21.09.1998

மறைவு
12.05.2022

ஆண்டுகள் போனாலும் ஆறவில்லை நெஞ்சங்கள்
பாலசுப்பிரமணியம் நிபோஜன் , பாலசுப்பிரமணியம் நிபோஜனா
கொற்றத்து அரசுகளின் குடை நிழலும் சாய்ந்தது போல்
எங்கள் கொற்றவரின் பிரிவாலே நிலைகுலைந்து போனோம் நாம்
வெள்ளி பூக்கவில்லை.......
விடி காலை மலர்ச்சியில்லை......
மண்ணும் குளிரவில்லை மனங்களிலே தெளிவுமில்லை....
ஆண்டுகள் போனாலும் ஆறவில்லை எங்கள் நெஞ்சங்கள் ....
வெள்ளை சிரிப்பாலே எங்கள் உள்ளம் கவர்ந்தவர்கள்
இல்லை என்ற செய்தி நமக்கு பேரிடியாய் இறங்குதையோ...
அண்ணன் என்றும் தங்கை என்றும் ஆயிரமாய் உறவு சொன்னோம்...
கூடி நின்ற கொடி பார்த்து எந்த பேடிகள் கண் பட்டதடா???
அடம்பன் கொடியாக திரண்டிருந்தோம்
எங்களது குலத்தை கெடுப்பதற்கு கண் வைத்தான் கா்லனவன்...
அள்ளி உமை கொஞ்சி அன்னமிட்ட கைகளினால்
வாய்க்கரிசி போட வைத்த காலனுக்கும் ஒரு காலம் வரும்...
தெய்வம் நின்று கருவறுக்கும் காலத்தில் எங்கள் துயர் விளங்கும் காலனுக்கும்.
ஆற்றுவதற்கு வார்த்தை இன்றி கண்ணீரால் கரைகின்றோம்...
அன்னமாரின் பாதார விந்தங்களில் நிம்மதியாய் உறங்குங்கள்.

(C-6459)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



தோற்றம்
20.12.2000

மறைவு
08.11.2020

கூவில்,
கீரிமலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.